உ

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார்

இயற்றிய

# திருநீலகண்ட நாயனுர் சரித்திரமும் இயற்பகை நாயனுர் சரித்திரமும்

இவை

மகாமகோபாத்தியாய

**டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்**

எழுதிய சரித்திரத் தொடர்ச்சி, குறிப்புக்கள்
முதலியவற்றுடன்

மதராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றன.

Copyright
Registered

1944

[விலை ரூ. 1/-

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார்

இயற்றிய

# திருநீலகண்ட நாயனார் சரித்திரமும்
# இயற்பகை நாயனார் சரித்திரமும்

---

இவை

மகாமகோபாத்தியாய

## டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

எழுதிய சரித்திரத் தொடர்ச்சி, குறிப்புக்கள்
முதலியவற்றுடன்

அவர்கள் குமாரர்

எஸ். கலியாண சுந்தரையரால்

மதராஸ் லா ஜர்னல் அச்சுக்கூடத்திற
பதிப்பிக்கப்பெற்றன

Copyright
Registered

1944

[விலை ரூ. 1/-

உ

கணபதி துணை

# முகவுரை

என் தந்தையாராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் அவ்வப்போது 'கலைமகளி'ல் கோபாலகிருஷ்ண பாரதியார் சரித்திரத்தை எழுதிவந்து பின்பு சில கீர்த்தனங்களுடனும், திருநீலகண்ட நாயனார் சரித்திரம், இயற்பகை நாயனார் சரித்திரம் இவற்றின் பகுதிகளுடனும், 1936-இல் தனிப்புத்தகமாக வெளியிட்டிருப்பது அன்பர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

திருநீலகண்ட நாயனார் சரித்திரம், இயற்பகை நாயனார் சரித்திரம் இந்த இரண்டையும் கலைமகளிலேயே அப்பால் பிரசுரித்து வந்தார்கள். இவை சம்பந்தமாக ஐயரவர்கள் எழுதியுள்ள குறிப்பை, இப்புத்தகம் 70-ஆம் பக்கத்திற் பார்க்கலாம்.

முன் போலவே இப்போதும் 'கலைமகள்' அதிபராகிய ஸ்ரீமான் ரா. நாராயண ஸ்வாமி ஐயரவர்கள் இவற்றை ஒரு தனிப்புத்தகமாக வெளியிடுவதில் எனக்கு ஒருவிதமான கவலையுமில்லாமல் வேண்டிய உதவிகளைப் புரிந்துள்ளார்கள். அவ்வியாஜமாக அவர்கள் இத்தகைய உதவி புரிவதற்கு அவர்கள் திறத்தில் நான் மிக்க கடப்பாடுடையேன்.

என் தந்தையாரவர்கள் பல காலமாகத் தொகுத்து வைத்துள்ள இசைத்தமிழ்நூல்களும், பல வித்துவான்கள் இயற்றிய தனி உருப்படிகளும் நல்லிசைப் புலவர்கள் பலருடைய வரலாற்றுக் குறிப்புக்களும் உள்ளன. அவை இறைவன் திருவருளாலும் அன்பர்களுடைய ஆதரவாலும் வெளிவருவதற்குரிய நற்காலத்தை எதிர்பார்க்கிறேன்.

| | |
|---|---|
| தியாகராஜ விலாஸம், | இங்ஙனம் |
| திருவேட்டீசுவரன்பேட்டை | **S. கலியாண சுந்தரையர்** |
| 28—4—'44 | |

உ

கணபதி துணை

# திருநீலகண்ட நாயனர் சரித்திரம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பெரிய புராணம்)

சௌனகாதி முனிவர்களைப் பார்த்துச் சூத மகா முனிவர் சொல்லுகிறார்:

## 1

[ராகம்: பூரிகல்யாணி—தாளம்: ரூபகம்]

பல்லவி

திருநீல கண்டத் தருமைச்
சேதி சொல்கிறேன் கேளுங்கள் (திரு)

அநுபல்லவி

பெருநீல கண்டர் பாதம்
பிசகாமல் மனதை நாட்டும் (திரு)

சரணம்

இரவும் பகலும் இடைவிடாம லுழலும்
இந்தப் பவசாகரம்

எளிதாக வேகரை யேறலாம்
இகபரம் பெறலாம்
பரிவுடன் பதம் பாடலாம்—செய்த
பாபங்கள் தள்ளிப் போடலாம்
பரமானந் தக்கட லாடலாம்
பார்தன்னில் வெற்றிக்கொடி போடலாம். (திரு)

---

## சரித்திரச் சுருக்கம்

திருநீலகண்டத்துக் குயவனூர்க் கடியேன்.
(திருத்தொண்டத் தொகை)

சொல்லச் சிவன்றிரு வாணைதன் றூமொழி தோணசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்னுமை கோனருளால்
வில்லைப் புரைநுத லாளோ டிளமைபெற் றின்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனுஞ் செய்தவனே.
(திருத்தொண்டர் திருவந்தாதி)

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த ராகித்
தீண்டிலெமைத் திருநீல கண்ட மென்று
சொல்லுமனை யாடனையே யன்றி மற்றும்
துடியிடையா ரிடையின்பந் துறந்து மூத்தங்
கெல்லையிலோ டிறைவைத்து மாற்றி நாங்கள்
எடுத்திலமென் றியம்புமென விழிந்து பொய்கை
மெல்லியலா ளுடன்மூழ்கி யிளமை யெய்தி
விளங்குபுலீச் சரத்தரனை மேவி னாரே.
(திருத்தொண்டர் புராண சாரம்)

## 2

[ராகம்: கல்யாணி[1]—தாளம் ஆதி]

### பல்லவி

திருநீல கண்டன் சரித்ரம்
அதி விசித்ரம்—மிகப் பவித்ரம் (திரு)

### சரணங்கள்

1. தாதி வீட்டிலே புகுந்ததும்—அவள்
சரண மென்றுவந் தடைந்ததும்— இந்தச்
சேதி மனையாள் அறிந்ததும்—தன்னைத்
தீண்டா தேயென் றிகழ்ந்ததும் (திரு)

2. தில்லை நாயகர் தொடர்ந்ததும்—ஒரு
தீரா வழக்கு நடந்ததும்
பலநாளும் யௌவனம் அடைந்ததும்[2]—இந்தப்
பவசா கரத்தைக் கடந்ததும் (திரு)

3. பரதே சிகளுக்கோ டளித்தலும்—கோ
[3]பாலகிருஷ்ணன் தொழும் பதத்திலும்—சிவ
பக்தி பண்ணியே களித்தலும்—நல்ல
பாக்கிய மேஇக பரத்திலும் (திரு)

(விருத்தம்)

வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாக நோக்கி மன்னுசிற் றம்ப லத்தே
ஆதியு முடிவு மில்லா வற்புதத் தனிக்கூத் தாடும்
நாதனூர் கழல்கள் வாழ்த்தி வழிபடு நலத்தின் மிக்கார்.

---

(பிரதிபேதம்) 1. தேவகாந்தாரி. 2. அழிந்ததும்.
3. நடராஜர் பதத்தைத் துதிப்பதும் - பக்திவிடா துள்ளங் களிப்பதும்.

பொய்கடிந் தறத்தின் வாழ்வார் புனற்சடை முடியார்க் கன்பர்
மெய்யடி யார்கட் கான பணிசெயும் விருப்பி னின்றார்
வையகம் போற்றுஞ் செய்கை மனையறம் புரிந்து வாழ்வார்
சைவமெய்த் திருவின் சார்வே பொருளெனச் சாரு நீரார்.

அளவிலா மரபின் வாழ்க்கை மட்கல மமுதக் காக்கி
வளரிளந் திங்கட் கண்ணி மன்றுளா ரடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க வோடளித் தொழுகு நாளின்
இளமைமீ தூர வின்பத் துறையினி லெளிய ரானார்.

(பெரிய புராணம்)

சிதம்பரத்தில் குலாலர் குலத்தில் திருநீலகண்டரென்பவர் உதித்து இளமை தொடங்கியே சிவபக்திச் செல்வமுடையவராகி விளங்கினார். நாள்தோறும் ஸ்ரீ ஆனந்த நடராஜ மூர்த்தியைத் தரிசித்து இன்புறும் நியமமுடையவரானார். இல்லறத்தை நடத்திச் சிவனடியார்களிடத்தில் மிக்க அன்புடையவராகி அவர்களுக்கு வேண்டிய திருவோடுகள் இயற்றி அவற்றை அளித்து வந்தார்.

ஒருநாள் தில்லைச் சிற்றம்பல தரிசனம் செய்துகொண்டு வீடு திரும்புகையில் காற்றும் மழையும் கலந்து அடிக்க ஆரம்பித்தன. திருநீலகண்ட நாயனார் மழைக்கு எங்கேனும் ஒதுங்கலாமென்று எண்ணியவராய் அருகில் இருந்த ஒரு வீட்டுத்திண்ணையில் அமர்ந்தார். அங்கே உட்கார்ந்து சொல்லுகிறார்:

## 3

[ராகம்: தநாஸரி—தாளம்: ரூபகம்.]

1. காற்றும் மழையும் கலந்து வீசுதே
—மின்னல் மின்னிக்
கடடடென்று இடியும் இடிக்குதே.

2. வேற்றொருவரும் வருகத் தோணுமோ
—அந்தகாரம்
மிகுந்த கங்குல் பாதை தோணுமோ.
3. சென்னி நீர்கண் சலச லென்கவே
—ரோமகூபம்
சிலுத்துச் சடலம் முழுதும் நடுங்கவே.
4. தண்ணீர் பெருகி வெள்ள மாகவே
—திக்குத்திசைகள்
தட்டு மாறித் தடவி வருகவே.
5. கால கால சங்க ராபவா
—காமனுடலைக்
கறுக்கி நின்ற கண்ண னேசிவா.
6. நீல கண்டா நிஷ்க ளங்கனே
—நிர்விகல்ப
நித்ய சுத்த புத்தி முக்தனே.

இவ்வாறு நாயனார் சிவபெருமானைத் தோத்திரம் செய்யும்போது, அந்த வீட்டுக்காரியாகிய கணிகை ஒருத்தி அதைக் கேட்டுப் புறத்தே வந்து பார்த்துச் சிவனடியாரொருவர் வீற்றிருப்பதை அறிந்து மிக்க ஸந்தோஷமடைந்து அவரை உள்ளே வந்து அமரச் செய்து உபசரித்து ஸல்லாபம் செய்யத் தொடங்கினாள்.

புராணிகர் சொல்கிறார்

4

[ராகம்: பூரிகல்யாணி—தாளம்: சாபு]

பல்லவி

ஸ்வாமி ஸ்வாமியென்று கும்பிட்டுத் தழுவினாள்
தைய லும்மிகத் துய்ய மனதுடன்
மையல் மீறியே கையைத் தூக்கியே (ஸ்வாமி)

### அநுபல்லவி

ஸ்வாமி ஸ்வாமியென்மேல் தயவுசெய் திடவேணும்
காமி காமி யென்று காலில் விழுந்தெழுந்து
(ஸ்வாமி)

### சரணங்கள்

1. கையில் வீணைகொண்டு பாடினாள்—காமக்
கவலையி னால்மிகவும் வாடினாள்
செய்ய திருத்தாள்கள் சூடினாள்—இங்கே
[1]தெய்வம் வந்ததென்றுகொண் டாடினாள்
(ஸ்வாமி)

2. வாடைக் கந்தப்பொடி பூசினாள்—உள்ளே
வாருமென் றுய்யாரம் பேசினாள்
ஜாடை காட்டிப்பன்னீர் வீசினாள்—இவரைச்
சரஸம் [2]செய்யவே மனங் கூசினாள் (ஸ்வாமி)

3. திருநீல கண்டரைக் கண்டவள்—ஒன்றும்
தெரியாமல் பரவசங் கொண்டவள்
இருவினைப் பிணிகளை வென்றவள்—மருந்து
இதுவென்று [3]ஹ்ருதயத்தில் கொண்டவள்
(ஸ்வாமி)

திருநீலகண்ட நாயனாரோடு அளவளாவி மகிழ்ந்த தாசி சிவபக்தி மிக்கவளாகையினால், 'இந்தப் பெரியவரைத் தரிசித்துப் பழகியது நாம் செய்த தவப்பயனே' என்று ஆனந்தமடைந்து கூறுகின்றாள் :

---

(பி - ம்.) 1. தேவர் வந்ததென்று. 2. செய்யவே சற்று மனம். 3. ஹ்ருதயத்தி லெண்ணிக் கொண்டவள். இங்கே வேறொரு கீர்த்தனம் உண்டென்று தெரிகிறது. அதில்,

'வாரும் வாருமென்று மலரடி பணிந்து
வருந்தி வருந்தியவளுள் அழைத்தாள்

## 5

[ராகம் : சாமா—தாளம் : ரூபகம்]

### பல்லவி

மா தவமே ஒருருவாய்
வந்ததுகாண் [1]வழிவசமாய் (மா தவமே)

### அநுபல்லவி

ஆதவனைக் கண்டபனி போலே
[2]ஆச்சு தென்றன் குறைகள் தீர (மா தவமே)

### சரணங்கள்

1. [3]எத்தனையோ ஜன்மங்களை
எடுத்தெடுத்து மானிடமாய்ப்
பெற்ற பிறவி யன்ரோ இந்தப்
பெரியவர் தரிசனம் கிடைத்தது (மா தவமே)

2. [4]பாதியிரா வேளை தனில்
வலியவந்த பாக்கியமே
ஆதிபரமகுரு ராயரல்லவோ
இதைச் சொல்லவோ (மா தவமே)

---

மாரியி னனைந்திடும் பெரியவ ருடம்பை
மலர்ப்பீ தாம்பரத்தால் துடைத்தாள்'

என்ற ஒரு பகுதி மாத்திரம் கிடைத்தது. 1. விதிவசமாய். 2. ஆச்சுதேயென் பாவந்தொலைய.

3. மற்ருெரு பாடம் வருமாறு:
எத்தனையோ ஜன்மங்களை எடுத்தலுத்தேன் விதிவசமாய்ப்
பெற்றபிறவி நீக்க வன்ரோ பெரியவர் தரிசனம் கிடைத்தது.

4. மற்ருெரு பாடம்:
பாதிரா வேளைதன்னில் வலியவந்த பாக்கியமே
பாலகிருஷ்ணன் பணியப் பார்க்க வருந்தி வந்த என்சாமி.

3. நீல கண்ட மென்றுரைத்தெந்
நேர மும்சிவ கதைபடிக்கும்
சீலகுணத் தொண்டர் திருச்
சேவடி கண்டேன் அடியாள் (மாதவமே)

(விருத்தம்)

அவர்தங்கண் மனைவி யாரு மருந்ததிக் கற்பின் மிக்கார்
புவனங்க ளுய்ய வையர் பொங்குநஞ் சுண்ண யாஞ்செய்
தவமின்று தடுத்த தென்னத் தகைந்துதான் றரித்த தென்று
சிவனெந்தை கண்டந் தன்னைத் திருநீல கண்ட மென்டார்.
ஆனதங் கேள்வ ரங்கோர் பரத்தைபா லணைந்து நண்ண
மானமுன் பொருது வந்த வூடலான் மனையின் வாழ்க்கை
ஏனைய வெல்லாஞ் செய்தே யுடனுறை விசையா ரானார்
தேனலர் கமலப் போதிற் றிருவினு முருவின் மிக்கார்.
(பெரிய புராணம்)

திருநீலகண்ட நாயனார் தாசிவீட்டில் தங்கியிருந்து விட்டுப் பிறகு வீடு வந்து சேர்ந்தார். கற்பிற் சிறந்தவராகிய அவருடைய மனைவியார் தம் கணவர் திருமேனியிலுள்ள பரிமள கந்தங்களைக் கண்டு சந்தேகமடைந்து கூறுகிறார்:

௬

[ராகம்: நாதநாமக்கிரியை—தாளம்: ரூபகம்]

பல்லவி

இந்த மோகம் வந்த தென்ன
விந்தை சொல்லுமே (இந்த)

சரணங்கள்

1. எந்த விதமும் தென்புலியூர்
ஈசன் கழலை மெய்யென் றேத்திச்

சிந்தை தளர் பெந்த மீறி
அந்த வேளை நொந்து சிந்தை (இந்த)

2. மாசில் லாத கோவில் சென்று
வாழ்த்திப் போற்றிப் பணிந்தி டாமல்
வாசம் புனுகு பூசி யேஇதம்
பேசி மடக்கும் வேசி யிடத்தில் (இந்த)

(விருத்தம்)

மூண்டவப் புலவி தீர்க்க வன்பனார் முன்பு சென்று
பூண்டயங் கிளமென் சாயற் பொற்கொடி யனையார் தம்மை
வேண்டுவ விரந்து கூறி மெய்யுற வணையும் போதிற்
றீண்டுவீ ராயி னெம்மைத் திருநீல கண்ட மென்றார்.
(பெரிய புராணம்)

தம்முடைய மனைவியார் கொண்ட கோபத்தை அறிந்த திருநீலகண்ட நாயனார் அவரை அணுகிச் சமாதானம் செய்ய முயலும்போது அப்பெண்மணியார் பின்னும் சினம் மூளச் சொல்லலானார்:

## 7

[ராகம்: சேஞ்சுருட்டி—தாளம்: ஆதி]

பல்லவி

மெத்த மெத்தக் கிட்டே வந்து
நெருங்காதேயும்—சாமி
வேடிக்கை விநோத மெல்லாம்
நானறிவேன் (மெத்த)

சரணங்கள்

1. சித்தமிப் படியோ வென்று
தெரியாமல்—பேத

புத்தியினால் மோசம் போனேன்
பத்தி பண்ணும் பெரி யோரே (மெத்த)

2. கட்டழ கினையமகிழ்ந்து
தொட்டகை யினாலே—எம்மைக்
கட்டி யணைத்திட வேண்டாம்
இஷ்டம் இவ்வளவு போதும் (மெத்த)

3. கற்றவித் தைகளைக்காட்டி
நத்திநத்திப் பேசுறீர்
சித்த சுத்திவெளி யாச்சு
எத்தி எத்தி மெள்ள மெள்ள (மெத்த)

## 8

[ராகம் : ஸாவேரி—தாளம் : மிச்ரம்]

1. வருவீர் வருவீரென்று வழிபார்த் திருந்தவள்
வாசற் புறத்தில் நின்று
வருந்திக்கொண்டாளோ—[1]லீலைகள் செய்து
பொருந்திக் கொண்டாளோ
சிறந்த நீதி நடந்த சேதி
பொய் சொல்லாதேயும். (வருவீர்)

2. மருமுல்லை சண்பக.வாடைகள் வீசவே
மலரணை யிலிருந்து
வரிசைதந் தாளோ—அதரக்கனி
உருசைந் தாளோ
பொங்கு தேகாமம் இங்கித நேமம்
பொய் சொல்லாதேயும் (வருவீர்)

---

(பி - ம்.) 1. கலைகள் செய்து.

3. வர்ணச் சரிகைச்சேலை மதிமுகத் தாளும்மை
மாயப் பொடியைப் போட்டு
வசப்படுத் திக்கொண்டாளோ—கை
வசப்படுத் திக்கொண்டாளோ
வென்றாளோ (வருவீர்)

(விருத்தம்)

ஆதியார் நீல கண்டத் தளவுதாங் கொண்ட வார்வம்
பேதியா வாணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
எதிலார் போல நோக்கி யெம்மையென் றதனுன் மற்றை
மாதரார் தம்மை யென்றன் மனத்தினும் தீண்டே னென்றார்.

(பெரிய புராணம்)

தம்முடைய மனைவியார் திருநீலகண்டத்தின்மேல் ஆணையிட்டு, "எம்மைத் தீண்டவேண்டாம்" என்று சொன்னதைக் கேட்ட நாயனர், "இனி எந்தப் பெண்பாலையும் தீண்டேன்" என்று சபதங் கூறிச் சொல்கிறார்.

௭

[ராகம்: நாதநாமக்கிரியை—தாளம்: சாபு]

பல்லவி

மாதரை மதியேன்—மனமிருத்தி
ஆதரித் தழையேன் (மாதரை)

அநுபல்லவி

பாதகி பெண்ணுசை சூதென் றறியாமல்
பதறி உருகிநெஞ்சம் குதறித் தடுமாறி (மாதரை)

சரணங்கள்

1. மதிகெட்டு நடந்தேன்—அநியாயமாய்ப்
பதிகெட்டுக் கிடந்தேன்—மிகவே ஊறும்

சீயும் குருதிகளும் தோயும் இறைச்சிகளும்
[1]சீயென் றுதறிடவு பாயம் அறிந்துகொண்டேன்
(மாதரை)

2. உற்றது சரீரம்—ஒரொன்பது
பொத்தல் விகாரம்—காற்றடங்கினல்
ஊரும் பேருமில்லை உற்ரு ருறவுமில்லை
ஆரும் புகழ்வதில்லை வேணும் வேணுமென்று
(மாதரை)

3. தூர விலகுவார்—வரு
வாரும் இகழ்வார்—ஆபாசத்தை
ஞாய மறிந்தி டாமல் மாய வலைக்குள் சிக்கி
நாளைக் கழித்துவிட்டேன் மானைப் பழித்தவிழி
(மாதரை)

4. பதஞ்சலி முனிக்குக்—கைலைதன்னில்
இதஞ்சொன்ன படிக்குத்—தில்லையில்வந்து
பாதச் சிலம்பசையப் போயம் முனிக்கிசையப்
பரத நடனமிட்ட வரதத்தாண் டவராயா
(மாதரை)

5. பாதத்தை மறவேன்—பரமகுரு
போதத்தைத் துறவேன்—எப்போதுங் கோ
பாலகிருஷ் ணன்பணியும் சிலச் சிதம்பரத்தை
ஸ்மரித்த வுடன்முக்தி தரிசித்துக் கொள்ள
லாம் (மாதரை)

தம்மை நிந்தித்துப் பேசிய மனைவியாரது வார்த்தையை உபதேசமாக எண்ணிய நாயனர் அவரை நோக்கிச் சொல்லுகிருர்:

---

(பி - ம்.) 1. சீசீயென் றுதற வுபாயம்.

## 10

[ராகம்: பிலஹரி—தாளம்: ஆதி]

### பல்லவி

என்ன புத்தி சொன்னாயோ அடி—உன்றனுக்கினி
ஈடு ஜோடு சொல்லப் போமோடி (என்ன)

### அநுபல்லவி

தென்றல் முற்றிப் பெருங் காற்றா னதுபோலிந்தச் சுகம்
தெளிந்தவ ரில்லை அது தொல்லை
வெகு நல்ல தாகும் (என்ன)

### சரணம்

மாதவம் பெருகிவரும் மாமுனிவ னாகிமனம்
மயக்குமே கலங்குமே [1]மதங் கவரா
ஸாதகம் அறிந்து கொண்டேன்
என்றனக் கிந்தவகை
சம்மதமே எம்மதமே
சும்மாவே காலம் போகாமல் (என்ன)

### (விருத்தம்)

கற்புறு மனைவி யாருங் கணவனார்க் கான வெல்லாம்
பொற்புறு மெய்யு றுமற் பொருந்தவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்க ளிருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி யின்மை யயலறி யாமை வாழ்ந்தார்.

இளமையின் மிக்கு ளார்க ளிருவரு மறிய நின்ற
அளவில்சீ ராணை போற்றி யாண்டுகள் பலவுஞ் செல்ல
வளமலி யிளமை நீங்கி வடிவுறு மூப்பு வந்து
தளர்வொடு சாய்ந்து மன்பு தம்பிரான் றிறத்துச் சாயார்.

(பெரிய புராணம்)

---

(பி. ம்.) 1. மதகெவரா.

திருநீலகண்ட நாயனாரும் அவர் மனைவியாரும் இல்லற வாழ்வுக்குரியவை எல்லாம் செய்தும் இன்பநுகர்ச்சியில்லாமல் நெடுங்காலம் வாழ்ந்துவரலாயினர். புறத்திருந்து நோக்குபவர்களுக்குத் தங்கள் நிலைமை தெரியாமல் ஒழுகி வந்த இருவரும் முதுமைப் பருவமடைந்தும் சிவபெருமான்பால் அன்பு சிறிதும் குறையாமல் இருந்துவந்தனர்.

(விருத்தம்)

இந்நெறி யொழுகு நாளி லெரிதளிர்த் தென்ன நீண்ட
மின்னொளிர் சடையோன் றானுந் தொண்டரை விளக்கங் காண
நன்னெறி யிதுவா மென்று ஞாலத்தோர் விரும்பி யுய்யும்
அந்நெறி காட்டு மாற்றா லருட்சிவ யோகி யாகி.

சீளொடு கோவணஞ் சாத்திக் கேடிலா
வாள்விடு நீற்றொளி மலர்ந்த மேனிமேற்
றோளொடு மார்பிடைத் துவளு நூலுடன்
நீளொளி வளர்திரு முண்ட நெற்றியும்.

நெடுஞ்சடை கரந்திட நெறித்த பம்பையும்
விடுங்கதிர் முறுவல்வெண் ணிலவு மேம்பட
இடும்பலிப் பாத்திர மேந்து கையராய்
நடந்துவேட் கோவர்தம் மனையி னண்ணினார்.

(பெரிய புராணம்)

இன்பநுகர்ச்சியின்றி வாழ்ந்துவந்த இத்தம்பதிகளுடைய பெருமையை உலகுக்கு விளக்க எண்ணிய சிவபெருமான் ஒரு சிவயோகியைப்போன்று திருக்கோலங் கொண்டு திருநீலகண்ட நாயனார் மனையை அணுகினார்.

(விருத்தம்)

நண்ணிய தவச்சிவ யோக நாதரைக்
கண்ணுற நோக்கிய காத லன்பர்தாம்

புண்ணியத் தொண்டரா மென்று போற்றிசெய்
தெண்ணிய வுவகையா லெதிர்கொண் டேத்தினார்.

பிறைவளர் சடைமுடிப் பிரானைத் தொண்டரென்
றுறையுளி லணைந்துபே ருவகை கூர்ந்திட
முறைமையின் வழிபடா மொழிந்த பூசைகள்
நிறைபெரு விருப்பொடு செய்து நின்றபின்.

(பெரிய புராணம்)

தம் வீட்டுக்கு எழுந்தருளிய சிவயோகியைக் கண்ட மாத்திரத்தில் நாயனார் அவரை எதிர்கொண்டு அழைத்து வந்து ஆசனமளித்து இருக்கச் செய்து முறைப்படியே செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்து வழிபட்டார்.

(விருத்தம்)

எம்பிரான் யான்செயும் பணியெ தென்றனர்
வம்புலா மலர்ச்சடை வள்ள லெண்டனார்
உம்பர்நா யகனுமிவ் வோடுன் பால்வைத்து
நம்பிநீ தருகநாம் வேண்டும் போதென்று.

தன்னையொப் பரியது தலத்துத் தன்னுழை
துன்னிய யாவையுந் தூய்மை செய்வது
பொன்னினு மணியினும் போற்ற வேண்டுவ
தின்னதன் மையதிது வாங்கு நீயென.

(பெரிய புராணம்)

சிவயோகியை வழிபட்ட பின்பு அவரை நோக்கி நாயனார், "அடியேன் செய்யவேண்டிய பணிவிடை யாது?" என்று கேட்க யோகியார் தம் கையிலுள்ள திருவோட்டை அவர்பால் அளித்து அதைப் பாதுகாத்து வைத்திருக்கச் சொல்லி அதன் பெருமையையும் எடுத்துக் கூறுகிறார்:

## சிவயோகியார் கூறுதல்

## 11

[ராகம்: தேவகாந்தாரி—தாளம்: ஆதி]

### பல்லவி

இந்த ஓடு உமது அடைக்கல [1]மாகவைத்
திருக்க வேணு மையா (இந்த)

### அநுபல்லவி

அந்த ரங்கமுள்ள தொண்டரென் றிங்கேநான்
அண்டிவந் தேனிந்த நன்றி மறந்திடேன் (இந்த)

### சரணங்கள்

1. பொன்னு மணியுமிதற் [2]குவமையா காது
பூதலத் திலிது போற்கிடை யாது
அன்ன மெடுத்துப்புசித் தாலூறா தாது
ஆசை கொள்ளுபவர்க் கிதுலபி யாது (இந்த)

2. இருந்த [3]விடந்தன்னி லெங்கும்ப்ர காசம்
இன்ப மிகுந்துதரு மேகயி லாசம்
[4]அருந்த வங்கள்செய் வோர்க்குவிச் வாசம்
அஷ்ட சித்திபெற லாமிது நேசம் (இந்த)

3. பார்த்த [5]பேர்களுடைய பாவங்கள் போக்கும்
பாதை காட்டிப்பர மானந்தம் [6]தேக்கும்
கீர்த்தி யோங்கப்பெரு வாழ்வினில் சேர்க்கும்
கேட்ட போது[7]தரு வீரிது வாக்கும் (இந்த)

---

1. (பி - ம்.) மாகவே இருக்கவேணும். 2. உவமையொவ்வாது. 3. இடங்களிலெங்கும். 4. அறிந்து தவங்கள் புரிவோர்க்கு. 5. பேர்க்குப் பழிபாவங்கள். 6. ஏற்கும். 7. தருவீர் திருவாக்கும்.

(விருத்தம்)

தொல்லைவேட் கோவர்தங் குலத்துட் டோன்றிய
மல்குசீர்த் தொண்டனுர் வணங்கி வாங்கிக்கொண்
டொல்லையின் மனையிலோர் மருங்கு காப்புறும்
எல்லையில் வைத்தவந் திறையை யெய்தினுர்.

வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நித்தனுர் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தா மம்பல மணைய மேவினுர். (பெரிய புராணம்)

திருநீலகண்ட நாயனுர் சிவயோகியார் தந்த திருவோட்டை வாங்கிக்கொண்டு தம் மனையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வைத்தனர். சிவயோகியாராக வந்த சிவபெருமான் நாயனுரை விட்டுச் சென்றனர்.

(விருத்தம்)

சாலநாட் கழிந்த பின்பு தலைவனுர் தாமுன் வைத்த
கோலமா ரோடு தன்னைக் குறியிடத் தகலப் போக்கிச்
சீலமார் கொள்கை யென்னுந் திருந்துவேட் கோவர் தம்பால்
வாலிதா நிலைமை காட்ட முன்புபோன் மனையில் வந்தார்.

வந்தபின் றொண்ட ருரு மெதிர்வழி பாடு செய்து
சிந்தைசெய் தருளிற் றெங்கள் செய்தவ மென்று நிற்ப
முந்தைநா ளுன்பால் வைத்த மொய்யொளி விளங்கு மோடு
தந்துநில் லென்று னெல்லாந் தான்வைத்து வாங்க வல்லான்.
(பெரிய புராணம்)

சில நாட்கள் ஆனபிறகு சிவபெருமான் தாம் அளித்த திருவோட்டைக் குறிப்பிட்ட இடத்திலே இராமல் மறையச் செய்து மீண்டும் சிவயோகி வேடம் பூண்டு திருநீலகண்ட நாயனுர்பால் வந்து, "முன்பு நாம் உன்பால் வைத்த திருவோட்டைத் தா" என்று கேட்கிறுர்.

## சிவயோகியார் கூறுதல்

### 12

[ராகம்: பியாக்—தாளம்: ஆதி]

பல்லவி

*பாத்திரம் தரவேணும்—நீரென்றன்*
*பாத்திரம் தரவேணும்—நான்தந்த* (பாத்)

சரணங்கள்

1. *பாத்திரந் தந்தா லுன்னை வாழ்த்தி யமுதுண்பேன்*
*க்ஷேத்திரத் திலிருந்து*
*ஸ்தோத்திர மாகச் சொல்வேன்* (பாத்)

2. *பாரில் இருப்பவர்கள் ஆரும் உனக்கிணையோ*
*சீருடன் வாழுமுன்றன்*
*பேரைச்சொல் லிப்பிழைப்பேன்* (பாத்)

3. *போதுதான் போகுது புத்தி மயங்குது*
*தீதொன்றும் சொல்லாமலே*
*திருநீல கண்டாவென்* (பாத்)

(விருத்தம்)

*என்றவர் விரைந்து கூற*
*விருந்தவ ரீந்த வோடு*
*சென்றுமுன் கொணர்வான் புக்கார்*
*கண்டிலர் திகைத்து நோக்கி*
*நின்றவர் தம்மைக் கேட்டார்*
*நேடியுங் காணர் மாயை*
*ஒன்றுமங் கறிந்தி லார்தா*
*முரைப்பதொன் றின்றி நின்றார்.*

(பெரிய புராணம்)

திருநீலகண்ட நாயனர், திருவோட்டைத் தாம் வைத்த இடத்திற் சென்று பார்த்தபோது அது காணப்

படவில்லை. அருகில் இருந்தவரைக் கேட்டுப் பார்த்தும் கிடைக்கவில்லை.

### புராணிகர் சொல்லுகிறுர்

### 13

[ராகம் : யதுகுலகாம்போதி—தாளம் : ரூபகம்]

**பல்லவி**

தேடிப் பார்க்கிறுர் உள்ளே (தேடிப்)

**அநுபல்லவி**

தேடிப் பார்க்கிறுர் தில்லையில் வாழும்
திருநீல கண்டக் குயவனு ருள்ளே (தேடிப்)

**சரணங்கள்**

1. அருந்தவம் புரிந்தெங்கும் இனி
[1]ஐயமெடுத் துப்புசிக்கும்
பெரியவர் காத்திருப்ப திங்ஙனே
பிசகென் றறிந்து கசங்கிக் கசங்கித் (தேடிப்)

2. ஊனமில்லாத் தொண்டரிவர்
ஒன்றும் அறிந்த தில்லையேநான்
மானக் குறைச்சல் வந்த தோவென்று
மனது மயங்கிக் கலங்கிக் கலங்கித் (தேடிப்)

3. நாடு புகழும் பொன்னம்பல
நடராஜன் மாயை யாலே
ஓடிப் போச்சு அந்த உடைமை
உளவறி யாமல் இளகி இளகித் (தேடிப்)

(பி - ம்.) 1. ஐயமெடுத்துப் புசித்து.

திருநீலகண்ட நாயனார் வீட்டுள் வைத்திருந்த ஓடு இறைவன் மாயையாற் காணுமற் போகவே அவர் எங்கே தேடியும் அகப்படவில்லை. அதனால் மனம் கலங்கிச் சிவயோகியாரிடம் வந்து சொல்கிறார்:

## 14

[ராகம்: சங்கராபரணம்—தாளம்: ஆதி]

பல்லவி

ஐயா உம தடைக்கலம் - வேணது
அளிப்பேனுன் மட்கலம் (ஐயா)

அநுபல்லவி

மெய்யாநீர் தந்த பாத்திரம் யான்வைத்த
இடத்தில் பார்த்தேன் ஓர் இடத்திலும் காணேன்
(ஐயா)

சரணங்கள்

1. காப்புங் கதவுமிட்டுக் காத்திருந் தேன்ஸ்வாமி
களவு போனதினி உளவறி யேன்நான்.
(ஐயா)
2. கெட்டிப் பூட்டுப்பூட்டிக் கட்டிக் காத்திருந்தேன்
கெட்டுப் போனவகை மட்டும் நானறியேன்
(ஐயா)
3. தெய்வமே கதியென்று நம்பின பேர்களைத்
தீங்குசெய் தால்நான் தாங்குவே னேழை
(ஐயா)

(விருத்தம்)

மறையவ னாகி நின்ற மலைமகள் கேள்வன் றானும்
உறையுளிற் புக்கு நின்ற வொருபெருந் தொண்டர் கேட்ப

இறையிலிங் கெய்தப் புக்காய் தாழ்த்ததென் னென்ன வந்து
கறைமறை மிடற்றி ஞனைக் கைதொழு துரைக்க லுற்ருர்.

இழையணி முந்நூன் மார்பி னெந்தைநீர் தந்து போன
விழைதரு மோடு வைத்த வேறிடந் தேடிக் காணேன்
பழையமற் றதனி னல்ல பாத்திரந் தருவன் கொண்டிப்
பிழையினைப் பொறுக்க வேண்டும் பெருமவென் றிறைஞ்சி
நின்ருர். (பெரிய புராணம்)

## ஸ்வாமி சொல்கிருர்

## 15

[ராகம்: யதுகுல காம்போதி—தாளம்: ஆதி]

1. வார்த்தை குளுமையாய்ப் பேசாதே—உன்
வல்லமை யறிவேண்டா—என்
வயிறு பசிக்குதடா—என்
மனது சலிக்குதடா

2. வழக்குப் பேசத் தெரியாதவனே—என்
மகிமை செல்லாதோ—உன்
பழக்கம் தெரிந்தவண்டா—வெகு
ஒழுக்கம் அறிந்தவண்டா.

3. வீட்டுக் குள்ளேநீ போகாதே—நான்
வெறிகொண்ட பேயனடா—இந்தக்
கோட்டுக்குள் ளே இருடா—இந்த
நாட்டினி லேதிருடா.

இவ்வாறு சிவயோகியார் சினந்து கூறும் வார்த்தைகளைக் கேட்டு மனம் மறுகிய நாயனர், "தேவரீர் தந்த ஓட்டைப்போல் வேறு ஓடு தருகிறேன். பெற்று க்ஷமித்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொள்கிருர்.

## 16

[ராகம் : கமாசு—தாளம் : ரூபகம்]

பல்லவி

திருவோடு போல் மறவோடு தருகுவேன்
தியங்க வேண்டாம் (திரு)

அநுபல்லவி

கருவா கியமண் எடுத்து—அதை அரைத்து
[1]உண்டை செறித்துப் பண்டி பொருத்தித்
தண்டு செலுத்திக்
கன்னம் குவித்து வண்ணம் பிடித்துத் (திரு)

* * *

(விருத்தம்)

சென்னியால் வணங்கிச் சொன்ன தொண்டரைச் செயிர்த்து நோக்கி
என்னிது மொழிந்த வாநீ யான்வைத்த மண்ணோ டன்றிப்
பொன்னினு லமைத்துத் தந்தா யாயினுங் கொள்ளேன் போற்ற
முன்னைநான் வைத்த வோடே கொண்டுவா வென்றான் மூன்றோன்.

கேடிலாப் பெரியோ யென்பால் வைத்தது கெடுத லாலே
நாடியுங் காணேன் வேறு நல்லதோ ரோடு சால
நீடுசெல் வதுதா னென்று தருகின்றே னெனவுங் கொள்ளா
தூடிநின் றுரைத்த தென்ற னுணர்வெலா மொழித்த தென்ன.

ஆவதெ னுன்பால் வைத்த வடைக்கலப் பொருளை வௌவிப்
பாவகம் பலவுஞ் செய்து பழிக்குநீ யொன்று நாணாய்
யாவருங் காண வுன்னை வளைத்துநான் கொண்டே யன்றிப்
போவதுஞ் செய்யே னென்றான் புண்ணியப் பொருளாய் நின்றான்.

வளத்தினுன் மிக்க வோடு வௌவினே னல்லே னெல்லை
உளத்தினுங் களவி லாமைக் கென்செய்கே னுரையு மென்னக்

---

(பி - ம்.) 1. உண்டை சேர்த்துப் பண்டி பெருத்து. இந்தக் கீர்த்தனம் முழுதும் பிரதியில் இல்லை.

களத்துநஞ் சொளித்த நின்றான் காதலுன் மகனைப் பற்றிக்
குளத்தினின் மூழ்கிப் போவென் றருளினான் கொடுமை யில்லான்.

ஐயர்நீ ரருளிச் செய்த வண்ணம்யான் செய்வ தற்குப்
பொய்யில்சீர்ப் புதல்வ னில்லை யென்செய்கேன் புகலு மென்ன
மையறு சிறப்பின் மிக்க மனையவ டன்னைப் பற்றி
மொய்யலர் வாவி புக்கு மூழ்குவா யெனமொ ழிந்தார்.

(பெரிய புராணம்)

ஓடு கிடைக்கவில்லையென்றும் வேறு ஓடு தருகிறே னென்றும் சொன்ன நாயனரைப் பார்த்துச் சிவயோகியார் கடுமையாகப் பேசத் தொடங்கினர்.

## 17

[ராகம் : 1ஹரிகாம்போஜி—தாளம் : ரூபகம்]

### பல்லவி

2ஈதென்ன நியாயமடா
இனமறி யாதவனே (ஈதென்ன)

### சரணங்கள்

1. துள்ளித் திரியும் காளை—சுமை
சுமந்திடும் பெரும் சூளை—போடும்
குயவனு னது நாளை
கூட்டிடும் இந்த வேளை (ஈதென்ன)

2. சபைதன்னில் வந்தாயோ
சம்மதங் கொண்டாயோ
அழைத்திங்கே வந்தாயோ
அறைக்குள்ளே புகுந்தாயோ (ஈதென்ன)

* * *

(பி-ம்.) 1. சாருகேசி. 2. இதென்ன.

சிவயோகியார் சொல்லும் வார்த்தைகளைக் கேட்கப் பொறாத நாயனருக்கும் யோகியாருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்தது.

## 18

[ராகம்: தோடி]

(நாயனர்)

1. நானே ஏழைக் குலாலன்—தில்லை
நாதனை நம்பினவன்
மானங் குறைந்திடச் சொன்னலிப் போதென்
மனது நோகுதையா.

(சிவயோகியார்)

2. மானமும் லெச்சையும் உண்டானல்—என்
மண்ணோடெடுப்பாயோ
ஈனச் சாதியான படியா லுனக்கு
இந்தப் புத்தி யாச்சு,

(நாயனர்)

3. ஈனச் சாதியென் றடிக்கடி சொன்னல்
என்ன லாபம் கிடைக்கும்
பிராணன் போனலும் போகட்டும் நானினிப்
பாத்திரத்திற் கென்செய்வேன்.

(சிவயோகியார்)

4. கெட்டால் பெரிய வெட்டரிவாளென்று
கேட்ட தில்லையோடா
சட்டம் சட்டமிது நல்லது தெய்வ
சபைக்கு நீவாடா.

(நாயனார்)

5. ஒட்டிக் கிரட்டி தருகிறே னையா
ஒன் றும் செய்ய வேண்டாம்
கெட்டுப் போச்சுதுநா னென்ன செய்குவேன்
கீர்த்தி பண்ணு மையா.

(சிவயோகியார்)

6. அருந்தவம் புரியும் பெரியோ ருடைமைக்
காசைப் படலாமோ
தெரிந்தவன் றனேநீ இப்படிச் செய்தால்
தெய்வமும் இல்லையடா.

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது சிவயோகியார், "நீ உண்மையில் என் ஓட்டை எடுக்கவில்லை யென்றால் உன் மகனைக் கைப்பற்றித் தீர்த்தத்தில் மூழ்கிச் சத்தியம் செய்து தா" என்று கூறினார். கேட்ட நாயனார், "எனக்குப் புத்திரன் ஒருவனும் இல்லையே!" என்ற போது, "உன் மனைவியின் கையைப் பிடித்து மூழ்கிச் சத்தியம் செய்து கொடு" என்று சிவயோகியார் சொல்லுகிறார்.

* * * *

[1]சொந்தப் பிரயோசனப் படுத்திக் கொள்ள
வில்லை யென் றும்—ஓட்டை
எடுக்கவில்லை யென் றும்
கங்கையில் முழுகி யென்றன்
கையை அடித்துச் சொல்லு—சம்சாரத்தைப்
பிடித்துக்கொண்டு சொல்லு.

---

1. இவ்விடத்தில் இருக்கவேண்டிய கீர்த்தனமொன்று கிடைக்கவில்லை. அதன் சிதைந்த உருவம் இது.

(தரவு கொச்சகக் கலிப்பா)

கங்கைநதி கரந்தசடை கரந்தருளி யெதிர்நின்ற
வெங்கண்விடை யவரருள வேட்கோவ ருரைசெய்வார்
எங்களிலோர் சபதத்தா லுடன்மூழ்க விசைவில்லை
பொங்குபுனல் யான்மூழ்கித் தருகின்றேன் போதுமென.
(பெரிய புராணம்)

சிவயோகியார் சொன்ன நிபந்தனையைக் கேட்ட நாயனர் மிகவும் மனந்தடுமாறி, "இந்தச் சங்கடத்திற்கு என்ன செய்வோம்!" என்று வருந்தினர். "ஐயா, நாங்கள் செய்துகொண்ட ஒரு சபதத்தால் அவள் கையை நான் தீண்டமுடியாத நிலையில் இருக்கிறேன். ஆனாலும் நான் மூழ்கிச் சத்தியம் செய்து தருகிறேன். ஏற்றருளவேண்டும்" என்று கேட்டுக் கொள்கிறார்.

## 19

[ராகம்: சங்கராபரணம்—தாளம்: சாபு]

பல்லவி

கைதொட மாட்டேன்—நானவள்
கைதொட மாட்டேன் (கை)

சரணங்கள்

1. கைதொட மாட்டேன் கனவிலுந் தானிந்த
மொய்குழ லாள்திரு முகத்தைப்பார்த்
தேயின்னும் (கை)
2. கருத்தினில் நினையாத காரியந் தனையிப்போ
திருத்திப்பூண் கட்டினல் தெய்வத்திற்
கேற்குமோ (கை)

3. தொல்லுலக கம்பெற்ற தூயன்வந் [1]தறைந்தாலும்
தில்லையம் பலவாணன் தெரிந்திடச்
சொன்னாலும் (கை)

## 20

[ராகம்: கல்யாணி—தாளம்: ஆதி]

பல்லவி

நான்மூழ்கித் தருகிறேன்
[2]நங்கைகை தொடலாகா—திந்த
வாவியில் (நான்)

அநுபல்லவி

தேன் மருவிய சோலைத் தில்லையி னில்வாழும்
தீக்ஷிதர் களைக்கொண்டு சாக்ஷியா
கவேவைத்து (நான்)

சரணம்

1. என்றன டைக்கலம் இந்த மண்ணோடு
வந்ததுண் டுகையில் தந்ததுண்டு
வைத்திருந் ததுண்டது
எந்த விடம்போன தென்றறி
யேனையா (நான்)

2. இந்தமண் ணோடுமேல் எந்த மனிதரும்
இச்சைப் படுவாரோ லெச்சை விடுவாரோ
வந்திருந் துகொண் டந்த இடத்திலுன்
சிந்தை தெளிந்திட உன்றனக்
கிப்போது (நான்)

---

(பி-ம்.) 1. திருந்தாலும். 2. நங்கைகை தொடாமல் (நான்)

(தரவு கொச்சகக்கலிப்பா)

தந்ததுமுன் றாராதே கொள்ளாமைக் குன்மனைவி
அந்தளிர்ச்செங் கைப்பற்றி யலைப்புனலின் மூழ்காதே
சிந்தைவலித் திருக்கின்றாய் தில்லைவா ழந்தணர்கள்
வந்திருந்த பேரவையின் மன்னுவன்யா னெனச் சென்றார்.

நல்லொழுக்கந் தலைநின்றார் நான்மறையின் றுறைபோனார்
தில்லைவா ழந்தணர்கள் வந்திருந்த திருந்தவையின்
எல்லையிலான் முன்செல்ல விருந்தொண்ட ரவர்தாமும்
மல்குபெருங் காதலினால் வழக்கின்மே லிட்டணைந்தார்.

அந்தணனு மெந்தைபிரா னருமறையோர் முன்பகர்வான்
இந்தவேட் கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேற் றன்மனைவி கைப்பற்றி
வந்துமூழ் கியுந்தாரான் வலிசெய்கின் றானென்றார்.

(பெரிய புராணம்)

சிவயோகியாராக வந்த சிவபெருமான் திருநீலகண்டர் கூறியதைக் கேட்டுச் சினம் மூண்டவராகி, "இந்த நியாயத்தைத் தில்லைவாழந்தணர்கள் சபையில் சொல்லித் தீர்த்துக்கொள்வோம்" என்று சொல்லிப் புறப்பட நாயனாரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார். சென்றவுடன் சிவயோகியார் சபையோரைப் பார்த்து நிகழ்ந்தவற்றைச் சொல்லலானார்.

## 21

[ராகம் :................— தாளம் : ஆதி]

பல்லவி

ஞாயம் நீங்கள் அறிந்து சொல்லுங்கள்—
இவனிப்படி

மாயம் செய்கிறான் பாருங்கள் (ஞாயம்)

அநுபல்லவி

பார்த்தால் தோணும் பசுப்போலே
பாய்ந்தால் தெரியும் புலிபோலே
நீற்றால் வேடம் ஒருகாலே
[1]நிலவரம் சொன்னேன் மண்மேலே
(ஞாயம்)

சரணங்கள்

1. நம்பின பேரைக் குடிகெடுப்பான்
நல்லவ னென்று உடம்பெடுப்பான்
அம்பல வாணரை யும்படிப்பான்
அருந்தவம் [2]புரிந்தவன் போல்நடிப்பான்
(ஞாயம்)

2. சாதி குலாலன் மண்ணெடுப்பான்
சண்டைகள் போட்டு மடிபிடிப்பான்
வேதியர் காண நூல்படிப்பான்
விதவித மாகப் பொருள்பறிப்பான்
(ஞாயம்)

3. தில்லை ஸ்தலமே இவன்ஊரு
திருநீல கண்டன் எனும்பேரு
[3]மல்லுக்கு நிற்ப திவன்சீரு
வல்லமைக் காரன் எனக்காரு (ஞாயம்)

(தரவு கோச்சகக்கலிப்பா)

நறைகமழுஞ் சடைமுடியு நாற்றோளு முக்கண்ணும்
கறைமருவுந் திருமிடறுங் காந்தருளி யெழுந்தருளும்

---

(பி - ம்.) 1. நிலவரம். 2. பெருந்தவன் போலுமிருப்பான்.
3. மல்லுக்கு நிற்பவன் சீரு.

மறையவனித் திறமொழிய மாமறையோ ருரைசெய்வார்
நிறையுடைய வேட்கோவர் நீர்மொழியும் புகுந்ததெனை.
(பெரிய புராணம்)

சிவயோகியார் கூறியவற்றைக் கேட்ட சபையார் திருநீலகண்ட நாயனாரைப் பார்த்து, "என்ன நடந்ததென் பதைச் சொல்லும்" என்று கட்டளையிட்டனர்.

(தரவு கொச்சகக்கலிப்பா)

நீணிதியா மிதுவென்று நின்றவிவர் தருமோடு
பேணிநான் வைத்தவிடம் பெயர்ந்துகாந் ததுகாணேன்
பூணணிநூன் மணிமார்பீர் புகுந்தபரி சிதுவென்று
சேணிடையுந் தீங்கடையாத் திருத்தொண்ட ருரைசெய்தார்.
(பெரிய புராணம்)

சபையோர் கேட்கவே திருநீலகண்டர், "இந்தப் பெரியவர்பால் நான் வாங்கி என் வீட்டில் வைத்த ஓடு மறைந்துபோயிற்று. எங்கே தேடியும் அகப்படவில்லை" என்று உண்மையை விண்ணப்பித்துக்கொண்டார்.

திருவுடை யந்த ணாளர்
செப்புவார் திகழ்ந்த நீற்றின்
உருவுடை யிவர்தாம் வைத்த
வோட்டினைக் கெடுத்தீ ராகிற்
றருமிவர் குளத்தின் மூழ்கித்
தருகவென் றுரைத்தா ராகின்
மருவிய மனைவி யோடு
மூழ்குதல் வழக்கே யென்றார். (பெரிய புராணம்)

திருநீலகண்ட நாயனார் கூறியதைக் கேட்ட சபையார், "உம்மிடமிருந்து ஓடு மறைந்தது உண்மையானால் உம்

மனைவியோடு நீரில் மூழ்கிச் சத்தியம் செய்து தருவதுதான் நியாயமாகும்" என்று கூறினர்.

சபையோர் சொல்வது

## 22

[ராகம்: சாமா—தாளம்: ரூபகம்]

பல்லவி

தப்பிதம் உன்னிடத்தில் அல்லவோ—
அதைச் சொல்லவோ (தப்)

சரணங்கள்

1. எப்படியும் வேதியர்க்கு
ஏற்கும்படி செய்வதாய்
ஒப்புக்கொண்ட படியாலந்த
உடைமையைக் கொடாதிருக்கும் (தப்)

2. மண்ணோட்டில் ஆசைவைப்பர்
மாநிலத்தில் தேவர்களும்
கண்ணோட்ட மாய்ப்பார்த்துக்
கையேந்தி வாங்கிவைத்த (தப்)

3. மண்டலங்கள் புகழுமிந்த
மாதவரைப் பின்றொடர்ந்து
கொண்டபெண்டிர் கைபிடித்துக்
குளத்தில் [1]முழு காதிருந்த[2] (தப்)

(விருத்தம்)

அருந்தவத் தொண்டர் தாமு மந்தணர் மொழியைக் கேட்டுத்
திருந்திய மனைவி யாரைத் தீண்டாமை செப்ப மாட்டார்

(பி - ம்.) 1. முழுகாதிருன். 2. இதன் பின் இருக்க வேண்டிய பல கீர்த்தனங்கள் இப்பொழுது கிடைக்கவில்லை.

பொருந்திய வகையான் மூழ்கித் தருகின்றேன் போது மென்று
பெருந்தவ முனிவ ரோடும் பெயர்ந்துதம் மனையைச் சார்ந்தார்.
(பெரிய புராணம்)

சபையோர் கூறியதைக் கேட்டுக் கலங்கிய திருநீல கண்டர் தம் மனைவியாரைத் தாம் தீண்டாமைக்குக் காரணம் இன்னதென்று சொல்ல மாட்டாதவராய் ஏதோ ஒரு தீர்மானம் செய்துகொண்டு எல்லாரோடும் தம் வீட்டை அடைந்தார்.

(விருத்தம்)

மனைவியார் தம்மைக் கொண்டு மறைச்சிவ யோகி யார்முன்
சினவிடைப் பாகர் மேவுந் திருப்புலீச் சுரத்து முன்னர்
நனைமலர்ச் சோலை வாவி நண்ணித்தம் முண்மை காப்பார்
புனைமணி வேணுத் தண்டி னிருதலை பிடித்துப் புக்கார்.
(பெரிய புராணம்)

தம் மனைவியாரை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தி லுள்ள திருப்புலீச் சுரமென்னும் சிவாலயத்தை அடைந்த நாயனர் அதன்கண் உள்ள சிவதீர்த்தத்தில் மூழ்கிச் சத்தியம் செய்வதாகப் புகுந்தார். தம்மனைவியாரைத் தீண்டுதல் கூடாதென்று சபதம் செய்தமையால் ஒரு மூங்கிற் கம்பை எடுத்து அதன் ஒரு முனையைத் தாம் பிடித்துக் கொண்டு மற்றொரு முனையைத் தம் மனைவியாரைப் பிடிக்கச் செய்து மூழ்கத் தொடங்கினர்.

(விருத்தம்)

தண்டிரு தலையும் பற்றிப் புகுமவர் தம்மை நோக்கி
வெண்டிரு நீற்று முண்ட வேதியர் மாதைத் தீண்டி
கொண்டுடன் மூழ்கீ ரென்னக் கூடாமை பாரோர் கேட்கப்
பண்டுதஞ் செய்கை சொல்லி மூழ்கினர் பழுதி லாதார்.
(பெரிய புராணம்)

நாயனர் தம் மனைவியார் காத்தைத் தொடாமல், மூங்கில் தண்டைப் பிடித்து மூழ்கப் புக்கதைக் கண்ட சிவயோகியார், "உன் மனைவி கையைப் பற்றிக்கொண்டு இத்தீர்த்தத்தில் மூழ்கவேண்டும்" என்று சொல்லவே நாயனர் மிகவும் கலங்கினர். வேறு வழி ஒன்றும் காணுமல் அதுகாறும் உலகத்தார் அறியாமல் மறைத்திருந்த தம் சபதத்தையும் அச்சபதத்திற்குக் காரணமான நிகழ்ச்சிகளை யும் எடுத்துச் சொல்லிவிட்டு ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தியானம் செய்யலானர்.

## 23

[ராகம்: பிலஹரி—தாளம்: சாபு]

### பல்லவி

ஐயனே கண் பாரும்—மனமிரங்கி
மெய்யனே கண்பாரும் (ஐயனே)

### அநுபல்லவி

வையம் புகழுந் தில்லை வனநாத ரேஎன்ஸ்வாமி
ஐயம்தீர்த் தேயுமக் காளாக்கிக் கொள்ளவேணும் (ஐயனே)

### சரணங்கள்

1. பஞ்ச பூதம் சேரும்
வீடு—இதில்
கொஞ்சி நெளியும் புழுக்
கூடு—உமைத்
தஞ்ச மென்று வந்தேன்
தயவாய்க் காத்திடும்
கொஞ்சம் கடைக்கண்ணலே
குளிரமுகம் பார்த்திடும் (ஐய)

2. கொழுத்த குமரிகளைக்
கண்டு—கொம்பில்
பழுத்த கனிபோல் பேசிக்
கொண்டு—அவள்
கழுத்தைக் கட்டிவெகு
காலம் கழித்துறங்கி
எழுத்துப்போ லாச்சுது
இனியென்ன செய்குவேன்[1] (ஐய)

இவ்வாறு துதி செய்துவிட்டுத் திருநீலகண்ட நாயனார் திருப்புலீச்சுரத்திலுள்ள தீர்த்தத்தில் தம் மனைவியாருடன் மூழ்கினார்.

## 24

[ராகம்: கானடா—தாளம்: ஆதி]

பல்லவி

நீரினில் மூழ்கினார்—திருநீல கண்டர்[2] (நீரினில்)

(விருத்தம்)

வாவியின் மூழ்கி யேறுங் கணவரு மனைவி யாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறு மிளமை பெற்றுத்
தேவரு முனிவர் தாமுஞ் சிறப்பொடு பொழியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற.

---

1. இதன் பின் உள்ள கீர்த்தனங்கள் அகப்படவில்லை.

2. இந்தக் கீர்த்தனம் முழுவதையும் நான் கேட்டிருக்கிறேன். இப்போது ஞாபகம் இல்லை. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள "தீயினில் மூழ்கினார் திருநாளைப் போவார்" என்ற கானடா ராகக் கீர்த்தனத்தை அடியொற்றியதாக அமைந்தது இது.

அந்நிலை யவரைக் காண வதிசயங் கண்டா ரெல்லாம்
முன்னிலை நின்ற வேத முதல்வரைக் கண்டா ரில்லை
இந்நிலை யிருந்த வண்ண மென்னென மருண்டு நின்றார்
துன்னிய விசும்பி னூடு துணையுடன் விடைமேற் கொண்டார்.
(பெரிய புராணம்)

திருநீலகண்டநாயனாரும் அவர் தேவியாரும் மூழ்கி எழுந்த மாத்திரத்தில் மூப்பு நீங்கி இளமைப்பருவம் உடையவராகித் திகழ, தேவரும் முனிவரும் பூமாரி பொழிந்தனர். அது கண்ட யாவரும் மிக்க ஆச்சரியத்தை அடைந்து நிற்க, சிவயோகியார் திடீரென மறையவே அவரைக் காணாது மயங்கினர். அப்போது ஆகாசத்தில் உமாதேவியாரோடு சிவபெருமான் இடபாரூடராய்த் திருக்கோலங் கொண்டு விளங்கினார்.

(விருத்தம்)

கண்டனர் கைக ளாரத் தொழுதனர் கலந்த காதல்
அண்டரு மேத்தி னார்க ளன்பர்தம் பெருமை நோக்கி
விண்டரும் பொலிவு காட்டி விடையின்மேல் வருவார் தம்மைத்
தொண்டரு மனைவி யாருந் தொழுதுடன் போற்றி நின்றார்.
(பெரிய புராணம்)

அங்ஙனம் எழுந்தருளிய சிவபெருமானைத் தேவரும் பூமியிலுள்ளவரும் தொழுது திருநீலகண்டநாயனார் பெருமையை எண்ணி உருகினர். அந்தத் தொண்டரும் அவர் பத்தினியாரும் சிவபெருமானைத் தரிசித்து நின்றனர்.

(விருத்தம்)

மன்றுளே திருக்கூத் தாடி யடியவர் மனைக டோறும்
சென்றவர் நிலைமை காட்டுந் தேவர்க டேவர் தாமும்
வென்றவைம் புலனான் மிக்கீர் விருப்புட னிருக்க நம்பால்
என்றுமிவ் விளமை நீங்கா தென்றெழுந் தருளி னாரே.

*விறலுடைத் தொண்ட னாரும் வெண்ணகைச் செவ்வாய்*
*[மென்றோள்*
*அறலியற் கூந்த லாளா மனைவியு மருளி னார்ந்த*
*திறலுடைச் செய்கை செய்து சிவலோக மதனை யெய்திப்*
*பெறலரு மிளமை பெற்றுப் பேரின்ப முற்றா ரன்றே.*
**(பெரிய புராணம்)**

அப்போது சிவபெருமான் அத்தம்பதிகளை நோக்கி, "நீங்கள் இருவரும் நம்பால் எப்போதும் இந்த இளமை யோடே இருப்பீர்களாக" என்று திருவாய் மலர்ந்து பிறகு மறைந்தருளினார். அவ்விருவரும் சிவபெருமான் திருவருளால் சிவலோகத்தை யடைந்து இளமையோடு வாழ்ந்து முக்திநிலையுற்றார்கள்.

உ

கணபதி துணை

# இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை

## கடவுள் வணக்கம்

(விருத்தம்)

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பெரிய புராணம்)

"இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியேன்"

(திருத்தொண்டத்தொகை)

(கட்டளைக்கலித்துறை)

செய்தவர் வேண்டிய தியாதுங் கொடுப்பச் சென்றவனைக்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை யீந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்
தெய்திய காவிரிப் பூம்பட்டி னத்து ளியற்பகையே.

(திருத்தொண்டர் திருவந்தாதி)

(விருத்தம்)

எழிலாருங் காவிரிப்பூம் பட்டி னத்துள்
இயல்வணிக ரியற்பகையா ரிருவர் தேட
அழலாய பிரான்றூர்த்த மறையோ ஞகி
ஆயிழையைத் தரவேண்டி யணைய வையன்
கழலாரப் பணிந்துமனைக் கற்பின் மேன்மைக்
காதலியைக் கொடுத்தமர்செய் கருத்தால் வந்த
பிழையாருஞ் சுற்றமெலாந் துணிந்து மீளப்
பிஞ்ஞகனு ரழைத்தருளப் பெற்று ளாரே.

(திருத்தொண்டர் புராணசாரம்)

(விருத்தம்)

சென்னி வெண்குடை நீடன பாயன்
திருக்கு லம்புகழ் பெருக்கிய சிறப்பின்
மன்னு தொல்புகழ் மருதநீர் நாட்டு
வயல்வ ளந்தர வியல்பினி லளித்துப்
பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடைய
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம்.

அக்கு லப்பதிக் குடிமுதல் வணிகர்
அளவில் செல்வத்து வளமையி னமைந்தார்
செக்கர் வெண்பிறைச் சடையவ ரடிமைத்
திறத்தின் மிக்கவர் மறைச்சிலம் படியார்
மிக்க சீரடி யார்கள்யா ரெனினும்
வேண்டும் யாவையு மில்லையென் னுதே
இக்க டற்படி நிகழமுன் கொடுக்கும்
இயல்பி னின்றவ ருலகியற் பகையார்.

(பெரிய புராணம்)

எல்லா வளங்களும் நிரம்பிய காவிரிப்பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் இயற்பகையா ரென்ற சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் அளவற்ற செல்வமும் வளங்களும் நிறைந்தவர். சிவனடியார் வந்து யாது கேட்டாலும் இல்லையென்னுமற் கொடுத்து வந்தார்.

(விருத்தம்)

ஆறு சூடிய வையர்மெய் யடிமை
அளவி லாததோ ருளநிறை யருளால்
நீறு சேர்திரு மேனியர் மனத்து
நினைத்த யாவையும் வினைப்பட முடித்து
மாறி லாதநன் னெறியினில் விளங்கும்
மனைய றம்புரி மகிழ்ச்சியின் வந்த
பேறெ லாமவ ரேவின செய்யும்
பெருமை யேயெனப் பேணிவாழ் நாளில்.

ஆயு நுண்பொரு ளாகியும் வெளியே
அம்ப லத்துணின் றுடுவா ரும்பர்
நாய கிக்குமஃ தறியவோ பிரியா
நங்கை தானறி யாமையோ வறியோம்
தூய நீறுபொன் மேனியில் விளங்கத்
தூர்த்த வேடமுந் தோன்றவே தியராய்
மாய வண்ணமே கொண்டுதந் தொண்டர்
மறுத வண்ணமுங் காட்டுவான் வந்தார்.

(பெரிய புராணம்)

இயற்பகையார் அடியார்கள் திருவுள்ளக் குறிப்பறிந்து அவர்களுக்கு வேண்டியனவற்றை யெல்லாம் நிறைவேற்றி இல்லறத்தை நடத்தி வந்தார். இங்ஙனம் இருக்கும் நாளில் சிவபெருமான் இல்லையே யென்னாத

அவருடைய பெருமையை உலகுக்குக் காட்டும் பொருட்டு ஒரு வேதியராகித் திருமேனியில் திருநீறு விளங்கக் காமக் குறிப்புக்கள் தோன்றும் தூர்த்தக் கோலத்தோடு இயற்பகையார் வீட்டை நோக்கி வந்தார்.

## 1

[ராகம்: ஆரபி—தாளம்: சாபு]

பல்லவி

திருத்தொண்டர் போலவே வந்தார்—இந்தச்
செகங்க ளனைத்தையும் தந்தார் (திருத்)

அநுபல்லவி

பொருத்தமாய்க் கீர்த்தியாற் புகழுங் காவேரிப்
பூம்பட்டினத்துச் செட்டித் தெருவில் நடந்து
(திருத்)

சரணம்

புரத்தை யெரித்த சிறுநகையார்—நன்மை
பொருந்தும் வேதங் களின்சிகையார்-அடிக்குத்
திருத்தொண்டு செய்யும் பெருந்தகையார்—என்றும்
செல்வங்களோங்கும் இயற்பகையார்—மனையில்
(திருத்)

(விருத்தம்)

வந்து தண்புகார் வணிகர்தம் மறுகின்
மருங்கி யற்பகை யார்மனை புகுத
எந்தை யெம்பிரா னடியவ ரணைந்தா
ரென்று நின்றதோ ரின்பவா தரவாற்

சிந்தை யன்பொடு சென்றெதிர் வணங்கிச்
சிறப்பின் மிக்கவர்ச் சனைகண் முன் செய்து
முந்தை யெம்பெருந் தவத்தினா லேகொல்
முனிவ ரிங்கெழுந் தருளிய தென்றார்.

(பெரிய புராணம்)

அடியவராகி வந்த சிவபிரானைக் கண்ட மாத்திரத்தில் இயற்பகையார் பேரன்புடன் சென்று எதிர்வணங்கி அர்க்கியபாத்தியங்கள் அளித்து அருச்சனை செய்து, "தேவரீர் இங்கே எழுந்தருளியது அடியேன் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியத்தினாலோ" என்று உபசரிக்கத் தொடங்கினார்.

(விருத்தம்)

என்று கூறிய வியற்பகை யார்முன்
எய்தி நின்றவக் கைதவ மறையோர்
கொன்றை வார்சடை யாரடி யார்கள்
குறித்து வேண்டின குணமெனக் கொண்டே
ஒன்று நீரெதிர் மறுதுவந் தளிக்கும்
உண்மை கேட்டுநும் பாலொன்று வேண்டி
இன்று நானிங்கு வந்தன னதனுக்
கிசைய லாமெனி லியம்பலா மென்றார்.

(பெரிய புராணம்)

இயற்பகை நாயனாருடைய உபசார வார்த்தைகளைக் கேட்ட சிவனடியார், "நீர் சிவபக்தர்கள் யாது வேண்டினாலும் மறுமல் உவந்து அளிப்பதாகக் கேட்டு உம்மிடத்தில் ஒரு பொருளைப் பெற விரும்பி இங்கே வந்தோம். அதனைக் கொடுக்கச் சம்மதமானால் சொல்லுவோம்" என்றார்.

## சிவனடியாருக்கும் இயற்பகையாருக்கும் ஸம்வாதம்

## 2

[ராகம் : கமாஸ்—தாளம் : ஆதி]

### இயற்பகையார்

பிச்சை யளித்திட்ட அன்னத்தை வாங்காமல்
பிரமை கொண்டவர்போ லென்றன்முன் னேநீர்
பட்சமுட னேநிற்கும் பக்தரே நீர்யார்
பரிவுடன் கூறுவீ ரந்தண ரேநீர் (பிச்சை)

### சிவனடியார்

உத்தர தேசம் நமக்கிருப்பு உம்மை
உத்தம பக்திமா னென்றறிந் தோநாம்
[1]குத்தர மாயும்மைக் காணவந் தோமிங்குக்
குணக்கட லாகிய [2]வைசியரே (உத்தர)

### இயற்பகையார்

சங்கர பக்தரென் னுருயிர் கேட்கினும்
சந்தோஷ மாகவே யளித்திடு வேனிங்கே
[3]கிங்கரன் மீதிலோர் சந்தேகம் வையாமல்
கிருபை [4]யுடன்கூறும் அந்தண ரேநீர்
(பிச்சை)

---

1. (பி - ம்.) உத்தரமாய். 2. வைசியரே நீர்.
3. கிங்கரன் - ஊழியன். 4. (பி - ம்.) யுடன் கூறுவீர்.

(விருத்தம்)

என்ன வவ்வுரை கேட்டியற் பகையார்
யாது மொன்றுமென் பக்கலுண் டாகில்
அன்ன தெம்பிரா னடியவ ருடைமை
ஐய மில்லைநீ ரருள்செயு மென்ன
மன்னு காதலுன் மனைவியை வேண்டி
வந்த திங்கென வங்கண ரெதிரே
சொன்ன போதிலு முன்னையின் மகிழ்ந்து
தூய தொண்டனார் தொழுதுரை செய்வார்.

(பெரிய புராணம்)

சிவனடியார் கூறியதைக் கேட்ட இயற்பகையார், "என்பால் உள்ள பொருள் யாதாயினும் தேவரீர் பெற்றுக் கொள்ளலாம்; கட்டளையிட்டருள வேண்டும்" என்று கூறவே சிவனடியார், "உம்முடைய மனைவியைக் கொடுக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

சிவனடியார் கூறுவது

3

[ராகம் : யதுகுலகாம்போதி - தாளம் : சாபு]

பல்லவி

மனைவியைத் தாருமென்றார் — வந்த அந்தணர்
மனைவியைத் தாருமென்றார் (மனைவி)

அநுபல்லவி

கனவிலுந் தானில்லை எனஉரை யாஉமது (மனைவி)

சரணங்கள்

1. அத்தனி டத்தில்மனம்
வைத்தவர் கள்தமது
சித்தத்துக் கிசைந்திடப்
பக்திசெய் யும்உமது (மனைவி)

2\. எதையன்பர் கேட்கினும்
அதையெல்லாம் [1]குணமாய்
மதியில்கொண் டுதவும்நீர்
விதியாக மணம்செய்த (மனைவி)

இவ்வாறு துணிந்து சிவனடியார் கேட்டவுடன் நாயனர் சிறிதும் மனம் கலங்காது மிகவும் மனமகிழ்ச்சியை அடைந்தார்.

(விருத்தம்)

இதுவெ னக்குமுன் புள்ளதே வேண்டி
எம்பி ரான்றந்த பேறெனக் கென்னுக்
கதுமெ னச்சென்று தம்மனை வாழ்க்கைக்
கற்பின் மேம்படு காதலி யாரை
விதிம ணக்குல மடந்தையின் றுணையிம்
மெய்த்த வர்க்குநான் கொடுத்தன னென்ன
மதும லர்க்குழன் மனைவியார் கலங்கி
மனந்தெ ளிந்தபின் மற்றிது மொழிந்தார்.

இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல்
என்னு யிர்க்கொரு நாதர்நீ ருரைத்த
தொன்றை நான்செயு மத்தனை யல்லால்
உரிமை வேறுள தோவெனக் கென்று
தன்ற னிப்பெருங் கணவரை வணங்கத்
தாழ்ந்து தொண்டனர் தாமெதிர் வணங்கச்
சென்று மாதவன் சேவடி பணிந்து
திகைத்து நின்றன டிருவினும் பெரியாள்.
(பெரிய புராணம்)

மகிழ்வுற்ற இயற்பகையார், "அடியேனிடத்தில் இல்லாத பொருளைத் தேவரீர் கேளாமல் உள்ளதையே

---

(பி - ம்.) 1. குணமாயது மதியில் கொண்டதவம் நீர்.

கேட்டது என் பாக்கியம்!" என்று சொல்லித் தம் மனைவியை அவருக்குக் கொடுக்கத் துணிந்தார்.

## 4

1. சொன்னது கேட்டியற் பகையார் - நெஞ்சில்
[1]முன்னிப் பெருகும் உவகையால்.
2. வினவ வேதியரைப் பணிந்தார் - தம்
மனைவியைக் கொடுத்திடத் துணிந்தார்.
3. மனத்தில்நீர் நினைந்தாசை கொண்டு - கேட்ட
தெனக்கிங்கு முன்னமே யுண்டு.
4. இலையெனக் கைபிசை யாமல் - நான்
உலகநிந் தைக்கிசை யாமல்.
5. எனக்குள்ள பொருளையா சித்தீர் - என்னை
இனிக்காத் தருளநே சித்தீர்.

இயற்பகையார் தம் மனைவியை நோக்கி, "இன்று இச்சிவனடியாருக்கு உன்னை அளித்தேன்" என்று சொல்ல, கேட்ட அம்மங்கை முதலில் திகைத்துப் பிறகு, "கணவரே கற்புடைய மங்கையருக்குத் தெய்வ மாதலால் தாங்கள் கட்டளையிடும் வண்ணம் செய்வேன்" என்று கூறிச் சிவனடியாரை வணங்கி அவரருகில் நின்றாள்.

(விருத்தம்)

மாது தன்னைமுன் கொடுத்தமா தவர்தாம்
மனம கிழ்ந்துபே ருவகையின் மலர்ந்தே
யாது நானினிச் செய்பணி யென்றே
இறைஞ்சி நின்றவர் தம்மெதிர் நோக்கிச்

(பி - ம்.) 1. முற்றிய பெருமுவகையால்.

சாதி வேதிய ராகிய தலைவர்
 தையல் தன்னையான் றனிக்கொடு போகக்
காதன் மேவிய சுற்றமும் பதியுங்
 கடக்க நீதுணைப் போதுக வென்றார்.

(பெரிய புராணம்)

தம் மனைவியை வழங்கிய இயற்பகையார் சிவனடியாரை வணங்கி, "இனிமேல் அடியேன் தேவரீருக்குச் செய்யவேண்டிய பணி யாது?" என்று கேட்க, அடியார், "இவளை நான் அழைத்துச் சென்றால் உம்முடைய சுற்றத்தாரும் ஊராரும் வந்து என்னை மறித்துத் துன்புறுத்துவார்கள். ஆகையால் அவர்களால் இடையூறு நேராவண்ணம் பாதுகாத்து இவ்வூரைக் கடக்கும் வரையில் நீர் துணையாக வரவேண்டும்" என்று தெரிவித்தருளினார்.

(விருத்தம்)

என்றவ ரருளிச் செய்ய யானேமுன் செய்குற் றேவல்
ஒன்றிது தன்னை யென்னை யுடையவ ரருளிச் செய்ய
நின்றது பிழையா மென்று நினைந்துவே றிடத்துப் புக்குப்
பொன்றிக ழறுவை சாத்திப் பூங்கச்சுப் பொலிய வீக்கி.

வாளொடு பலகை யேந்தி வந்தெதிர் வணங்கி மிக்க
ஆளரி யேறு போல்வா ரவரைமுன் போக்கிப் பின்னே
தோளிணை துணையே யாகப் போயினார் துன்னி னாரை
நீளிடைப் படமுன் கூடி நிலத்திடை வீழ்த்த நேர்வார்.

(பெரிய புராணம்)

சிவனடியார் கேட்டுக்கொண்டபடியே இயற்பகை நாயனார் கச்சு முதலிய உடைகளை அணிந்து வாளுங் கேடயமுந் தாங்கி மற்ற இருவரையும் முன்னே போகச் செய்து தாம் பின்னே காவலாகச் செல்லலானார்.

(விருத்தம்)

மனைவியார் சுற்றத் தாரும் வள்ளலார் சுற்றத் தாரும்
இனையதொன் றியாரே செய்தா ரியற்பகை பித்த னாற்
புனையிழை தன்னைக் கொண்டு போவதா மொருவ னென்று
துனைபெரும் பழியை மீட்பான் றொடர்வதற் கெழுந்து சூழ்வார்.

வேலொடு வில்லும் வாளுஞ் சுரிகையு மெடுத்து மிக்க
காலென விசையிற் சென்று கடிநகர்ப் புறத்துப் போகிப்
பாலிரு மருங்கு மீண்டிப் பரந்தவார்ப் பரவம் பொங்க
மால்கடல் கிளர்ந்த தென்ன வந்தெதிர் வளைத்துக் கொண்டார்.

(பெரிய புராணம்)

சிவனடியாராக வந்தவர் இயற்பகையாருடைய மனைவியை அழைத்துச் செல்வதை அறிந்த சுற்றத்தார் மிகக் கோபித்து ஆயுதங்களை எடுத்து அவர்களைச் சூழ்ந்துகொண்டனர்.

## 5

[ராகம்: அடாணா - தாளம்: ஆதி]

பல்லவி

தொடர்ந்து வளைந்து கொண்டார்—[1]கண்ணிலனல்
சொரிந்திட வேவெகுண்டார் (தொடர்ந்து)

அநுபல்லவி

படர்ந்த உலகிலில்லாக் கொடுமை இதென்றெண்ணிப்
பரவிடு மானதர்ல் விரைவாக வேநண்ணித் (தொடர்ந்து)

சரணம்

இல்லாள் தன் சுற்றமும் வல்லவ ருறவோரும்
இயற்பகை தான்பித்த னெனிலமு தினைநேரும்

(பி - ம்.) 1. என்றனையனைக் கண்ணிலனல்.

சொல்லாளே யிவன்கொண்டு செல்வதா மெனச்சேரும்
தொலையாப் பழிமீட்க அலைகடல் போல்யாரும்
(தொடர்ந்து)

(விருத்தம்)

வழிவிடுந் துணைபின் போத வழித்துணை யாகி யுள்ளார்
கழிபெருங் காதல் காட்டிக் காரிகை யுடன்போம் போதில்
அழிதகன் போகே லீண்டவ் வருங்குலக் கொடியை விட்டுப்
பழிவிட நீபோ வென்று பகர்ந்தெதிர் நிரந்து வந்தார்.
(பெரிய புராணம்)

சுற்றத்தார்கள், "இந்தப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு போகாதே" என்று சிவனடியாரை அச்சுறுத்தித் தடுத்தனர்.

(விருத்தம்)

மறைமுனி யஞ்சி னன்போன் மாதினைப் பார்க்க மாதும்
இறைவனே யஞ்ச வேண்டா வியற்பகை வெல்லு மென்ன
அறைகழ லண்ணல் கேளா வடியனே னவரை யெல்லாம்
தறையிடைப் படுத்து கின்றேன் றளர்ந்தருள் செய்ய லென்று.
(பெரிய புராணம்)

அப்பொழுது சிவனடியார் அஞ்சினர்போல இயற்பகையாரை விளித்து, "என்னைப் பாதுகாக்கவேண்டும்" என்று முறையிட்டார்.

௬

[ராகம்: சங்கராபரணம் - தாளம்: ரூபகம்]

பல்லவி

துணையாக வேவாரும் - தனபதியே
குணமுடனென்றனைக் காப்பதுன் பாரம் (துணை)

சரணங்கள்

1. வாரும் - அருள்பொழியப் -
பாரும் - [1]என்மேற்பரிவு
கூரும் - உமையல்லாமல் -
யாரும் - இல்லையே என்பின் (துணை)

2. காட்டி - வலையில்என்னை -
மாட்டிப் - பெரும்பழி
கூட்டி - மனசைமிக -
வாட்டி - விடாமலே (துணை)

இவ்வாறு கூறவே இயற்பகை நாயனார், "தேவரீர் அஞ்சவேண்டாம்; அடியேன் பாதுகாப்பேன்" என்று சொல்லி முன் வந்தார்.

(விருத்தம்)

பெருவிற லாளி யென்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
ஒருவரு மெதிர்நில் லாதே யோடிப்போய்ப் பிழையு மன்றேல்
எரிசுடர் வாளிற் கூறுய்த் துடிக்கின்றீ ரென்று நேர்ந்தார்.

(பெரிய புராணம்)

நாயனார் தம் சுற்றத்தாரை எதிர்த்து, "என் முன்னால் நில்லாமல் ஓடிவிடுங்கள்; இல்லையேல் உயிரை இழப்பீர்" என்று அறைகூவி அழைத்தார்.

(விருத்தம்)

எடாநீ யென்செய் தாயா லித்திற மியம்பு கின்றாய்
நாடுறு பழியு மொன்னார் நகையையு நாணு மின்று

(பி - ம்.) 1. என்னைப் பரிவாய்க் காரும்.

பாடவ முரைப்ப துன்றன் மனைவியைப் பனவற் கீந்தோ
கூடவே மடிவ தன்றிக் கொடுக்கயா மொட்டோ மென்றார்.
(பெரிய புராணம்)

சுற்றத்தார் இயற்பகையாரை நோக்கி, "நீ என்ன வார்த்தை பேசுகிறாய்! நாட்டினர் கூறும் பழியையும் பகைவர் நகைப்பையும் கண்டு நாணவில்லையே. உன் மனைவியைப் பிராமணனுக்குக் கொடுத்துத்தானா வீரம் பேசவேண்டும்? நாங்கள் உயிர் போனாலும் அவன் அவளை அழைத்துச் செல்ல உடன்படோம்" என்று கூறி ஆரவாரித்தார்கள்.

## 7

### சுற்றத்தார் கூற்று

[ராகம் : பியாக் - தாளம் : ஆதி]

#### பல்லவி

வீரிய மாகவே பேசுகி றாய்நீ - காரியா
காரியத் தைக்கரு தாமல் ஏசுகிறாய் (வீரிய)

#### சரணங்கள்

1. இந்தவெண் ணங்கொண்ட தென்று தொடுத்தோ
அந்தண ருக்குமனைவி யவளைக் கொடுத்தோ (வீரிய)

2. பகையுடை யவர்சிரிப் பதையெண்ணி டாமல்
மிகவரும் பழிக்குநீ வெட்கப்ப டாமல் (வீரிய)

சுற்றத்தார் பிறகு இயற்பகை நாயனார் மனைவியை நோக்கிப் புத்தி கூறத் தொடங்கினர்.

## 8

[ராகம் : சங்கராபரணம் - தாளம் : ரூபகம்[1]]

### பல்லவி

ஏழைப் பார்ப்பானடி
இச்சைப் படலா மோடி - இவன் (ஏழைப்)

### அநுபல்லவி

வாழாப்பெண் தாய்வீட் டிருக்கலாம் - இந்த
மண்டலத்தில் கண்ட துண்டு - இவன் (ஏழைப்)

### சரணம்

மாசில் லாதகள்ள வேஷ தாரிப்பர
தேசிதாண்டி சொன்னேன் - நம்ப
வேண்டா மடிகண்ணே - இவன் (ஏழைப்)

## ௯

[ராகம் : வராளி[2] - தாளம் : ரூபகம்]

### பல்லவி

பெண்ணே ஒரு வார்த்தை கேளடி (பெண்ணே)

### சரணங்கள்

(தமையன் கூற்று)

1. அண்ணனென் றென்னை யழைத்ததும் - நான்
அன்புட னுன்னை வளர்த்ததும்
புண்ணாய் மனசு சலித்ததும் - இனிப்
போதுமடி போதும் (பெண்ணே)

---

1. (பி - ம்.) ராகம்: பியாக் - தாளம்: சாபு தாளம்.
2. ராகம்: சோகவராளி.

(தாய் கூற்று)

2. நல்ல வாழ்வு சிறந்தவள் - நீ
நமது குலத்திற் [1]பிறந்தவள்
[2]எல்லா நீதி தெரிந்தவள் - நீ
என்னரு மைமக ளடிகண்ணே (பெண்ணே)

3. தனிவழி போகத் துணிவது - நம்
சாதிக்குச் சங்கடம் நேருது
இனமறி யாதவன் செய்தது
எங்கள் மனம் உருகுது (பெண்ணே)

## 10

### சுற்றத்தார் கூறுவது

[ராகம் : நாயகி - தாளம் : ...]

பல்லவி

இவனுடன் போக லாகுமோ
இப்படி மன மேகுமோ (இவ)

அநுபல்லவி

அவனியில் தாய்தந்தை இருக்க
ஆண்டி யைமிக வேண்டி வேண்டிக் கொண்டு (இவ)

சரணங்கள்

1. காசினிக்குள் வேடந்தரித்த
கனமாயக் காரனடி
மாசி லாதஉன் மனசை
மயக்கின தாரடி

(பி - ம்.) 1. வந்தவள். 2. எல்லா நீயு மறிந்தவள், எனக்கு மருமகள் முறை.

பேசி வயிறு வளர்க்கப்பர
தேசி வடிவங் கொண்டவனை
ஆசித்துச் செல்ல நியாயமோ
ஆவிதென்ன மாயமோ (இவ)

2. அருமை மகளே ஆதியிலுனை
அன்புடன் வளர்த்தெடுத்தோம்
அகத்தி லிருக்குந் துயர்களையெல்லாம்
அப்பொழு தேயுன்னால் விடுத்தோம்
பெருமை பெறுவா யென்றவனுக்குப்
பேதமில் லாமற் கொடுத்தோம்
பேதை யிவ்விதஞ் செய்யத் துயரப்
பெருங்கடலைப்போ யடுத்தோம் (இவ)

இவ்வாறு சுற்றத்தார் கூறுவதைக் கேட்டு இயற்பகையாருடைய மனைவி கூறுகிறாள்.

## 11

[ராகம் : தன்யாசி[1] - தாளம் : ரூபகம்]

### பல்லவி

கணவன் சொல் கேட்க வேணுமே
நான் என்ன செய்வேன் (கணவன்)

### சரணங்கள்

1. கணவன் சொல் கேளாவிட்டால்
கையெடுக்கத் தெய்வ முண்டோ
மணம் புரிந்த [2]மாண்பு போகுமே
நான் என்ன செய்வேன் (கணவன்)

(பி - ம்.) 1. தனாசரி. 2. தாழ்மை போச்சுதே.

2. ஆதரவு டன்புருஷன்
அக்கினிமுன் கைப்பிடித்த
காதல்முழு மையும் போகுமே
நான் என்ன செய்வேன் (கணவன்)

3. பண்ணுந்தவம் ஏதுமில்லை
பாண்டியனார் மனசுநொந்தால்
புண்ணியமில் லாமல் போகுமே
நான் என்ன செய்வேன் (கணவன்)

## 12

[ராகம் : மோகனம் - தாளம் : ஆதி]

### பல்லவி

யார் கட்டிய தாலி - இது
ஐயன் கட்டிய தாலி (யார்)

### அநுபல்லவி

அம்பலந்தனில் தாண்டவ மாடிய
அருளன் கட்டிய தாலி (யார்)

### சரணம்

அஞ்சலி செய்திடும் பேர்களைக் காத்திடும்
[1]ஆண்டவன் கட்டிய தாலி (யார்)

(பி - ம்.) 1. ஈசன் கட்டியது.

(விருத்தம்)

மற்றவர் சொன்ன மாற்றங் கேட்டலு மனத்தின் வந்த
செற்றமுன் பொங்க வுங்க ளுடற்றுணி யெங்குஞ் சிந்தி
முற்றுநும் முயிரை யெல்லா முதல்விசும் பேற்றிக்கொண்டு
நற்றவர் தம்மைப் போக விடுவனென் றெழுந்தார் நல்லோர்.
(பெரிய புராணம்)

சுற்றத்தார் கூறும் வார்த்தைகளைக் கேட்டு இயற்பகையார் கோபம் மூண்டு, "முதலில் உங்களையெல்லாம் மேலுலகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு இந்த அடியாருக்கு விடைகொடுத்தனுப்புவேன்" என்று சொல்லி யெழுந்தார்.

(விருத்தம்)

நேர்ந்தவ ரெதிர்ந்த போது நிறைந்தவச் சுற்றத் தாரும்
சார்ந்தவர் தம்முன் செல்லார் தையலைக் கொண்டு பெற்றம்
ஊர்ந்தவர் படிமேற் செல்ல வுற்றெதி ருடன்று பொங்கி
ஆர்ந்தவெஞ் சினத்தான் மேற்சென் றடர்ந்தெதிர் தடுத்தா
ரன்றே. (பெரிய புராணம்)

அப்போது சுற்றத்தார் இயற்பகையார்பாற் செல்லாமல் அவர் மனைவியை அழைத்துச் செல்லும் சிவனடியார் முன்னே சென்று, அவரைத் தடுக்கத்தொடங்கினர்.

### சுற்றத்தார் கூறுதல்

## 13

[ராகம் : செஞ்சுருட்டி[1] - தாளம் : ரூபகம்]

1. அன்னமிட்ட வீடுதனில்
கன்னமிட்ட கள்ளனிவன்
ஆரடா எந்த ஊரடா.

---

(பி - ம்.) 1. சாமா.

2. நீதிநெறி [1]யில்லாமல்
நினைவு தப்பி வந்ததென்ன
நில்லடா சேதி சொல்லடா.

3. கைப்பிடித்த கணவனைப்போல்
காதலுடன் வந்ததென்ன
கேளடா உயிர் மீளடா

4. கற்புடைய மங்கைதன்னைக்
கண்ணெடுத்தும் பாராதே
தாயடா அவள் தீயடா.

## 14

[ராகம் : கல்யாணி - தாளம் : ஆதி]

### பல்லவி

பரதார சங்க்ருகம் பண்ணலாமா -
நீ பிராம்மணனுச்சே (பரதார)

### சரணம்

திருடா நீயெங்கள் செட்டிவீட் டுக்கு வந்தாய்
தேன்மொழி யாளைக் கண்டு மகிழ்ந்தாய்
அடடா என்னமாய் - இது - அடடா என்னமாய்
அநியாயம் (பரதார)

சுற்றத்தார் கோபித்துத் தடுத்துப் பேசியதைக் கேட்ட சிவனடியார் அவர்களை நோக்கித் தம் இயல்பையும் நிலையையும் சொல்கிறார்.

---

(பி - ம்.) 1. தெரியாமல் நினைவற்று வந்ததேது.

## சிவனடியார் கூற்று

## 15

[ராகம் : [1]புன்னுகவராளி - தாளம் : ஆதி]

### பல்லவி

அடியார்க் கெளியவ னையா - பொன்னம்பலத்
தாண்டி நான் ஐயா (அடி)

### அநுபல்லவி

கட்செவி கைதனில் பிடிப்பேன் - விஷ
கடிமருந் தொன்றுயான் கொடுப்பேன் (அடி)

### சரணங்கள்

1. ஏழை யெருது ஒரு மாடு - எங்கும்
இரந்துண்ண லாம்வரை யோடு (அடி)

2. சாதி முறைமைகிடை யாது - அந்தச்
சாத்திரம் நமக்குத வாது (அடி)

3. பேரு மூருங்கிடை யாது - வீண்
பேச்சுப் பேசவுமுடி யாது (அடி)

4. அடியார் களைவிட்டுப் பிரியேன் - [2]பே
ராசை யடைபவரைக் குறியேன் (அடி)

சுற்றத்தாரிடம் இவ்வாறு சொல்லிவிட்டு இயற்பகையாரை நோக்கிக் கூறுகிருர்.

---

(பி - ம்.) 1. தனுசரி. 2. பெண் ணைசையடைந்தவரை ஸ்மரியேன்.

## 16

[ராகம் : சுருட்டி - தாளம் : ஆதி]

பல்லவி

பரதேசி நான் - பழிவந்து [1]சுமந்ததே (பர)

சரணங்கள்

1. பாட்டைப் படித்துமண்டை யோட்டை யெடுத்
துக்கிழ
மாட்டி [2]லேறிச்சுடு காட்டி லேதிரியும் (பர)

2. [3]ஆசை யுடனேயிவ ளழகைக் கண்டுவிசு
வாசம் பண்ணிமதி மோசம் போனவன்நான் (பர)

3. கிட்ட நெருங்கியின்னுந் தொட்ட பாடுமில்லை
பட்ட பாடுபோதும் செட்டியா ரேநான் (பர)

## 17

[ராகம் : நாதநாமக்கிரியை - தாளம் : ஏகதாளம்]

பல்லவி

பரதேசிப் பார்ப்பான்நான் - மெத்தப்
பயமா யிருக்குது [4]காண் - நான் (பர)

சரணங்கள்

1. கடல்புரண் டதுபோலே வருகுதே கூட்டம்
கைகால் நடுங்குது ஐயோ
சண்டை போடுவேனே அடிபடு வேனே
தலையிடுவேனே உயிர்விடுவேனே - நான் (பர)

---

(பி - ம்.) 1. சுமந்திடும். 2. எறித்தில்லைக் காட்டிலே. 3. நேசமுடனே யன்ன கோசமீதினில், ஆசைகொண்டுமதி மோச மாகினேன். 4. காணும்.

2. போதும் போதுமிந்தப் பூவைய ராசை
ஏதுகொண் டேன்நான் ஏழை - ஓய்
செட்டியாரே நீர் கெட்டிக் காரர்உமக்
கிஷ்டமில்லையா விட்டுவிடுகிறேன் (பர)

(விருத்தம்)

சென்றவர் தடுத்த போதி
லியற்பகை யார்முன் சீறி
வன்றுணை வாளே யாகச்
சாரிகை மாறி வந்து
துன்றினர் தோளுந் தாளுந்
தலைகளுந் துணித்து வீழ்த்து
வென்றடு புலியே றென்ன
வமர்விளை யாட்டின் மிக்கார்.

மூண்டுமுன் பலராய் வந்தார்
தனிவந்து முட்டி னார்கள்
வேண்டிய திசைக டோறும்
வேறுவே றமர்செய் போழ்தில்
ஆண்டகை வீரர் தாமே
யனைவர்க்கு மனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து
கலந்துமுன் றுணித்து வீழ்த்தார்.

சொரிந்தன குடல்க ளெங்குந்
துணிந்தன வுடல்க ளெங்கும்
விரிந்தன தலைக ளெங்கு
மிடைந்தன கழுகு மெங்கும்
எரிந்தன விழிக ளெங்கு
மெதிர்ப்பவ ரொருவ ரின்றித்
திரிந்தனர் களனி லெங்குஞ்
சிவன்கழல் புனைந்த வீரர். (பெரிய புராணம்)

தம்முடைய சுற்றத்தார் தடுப்பதைக் கண்ட இயற்பகையார் முன்னே வந்து அவர்களோடு போரிடத் தொடங்கிக் கைவாளே துணையாக மாறி மாறி அவர்களைப் பலவாறு மடித்தனர்.

## 18

[ பார்ஸி மெட்டு ]

### பல்லவி

இனத்துடன் போர் செய்தார் - இயற்பகை
(இனத்)

### அநுபல்லவி

சினந்து பதறி இடிபோல் குமுறி
சிங்கம்போலே பாய்ந்துமே (இனத்)

### சரணம்

கத்தியாலே வெட்டிச் சூலத்தாலே குத்திக்
கரங்களால் மொத்தியும்
கைகள் வேறு கால்கள் வேறு
உடல் வேறு தலை வேறு பலவிதமாகவே
முடித்து (இனத்)

### (விருத்தம்)

மாடலை குருதி பொங்க
மடிந்தசெங் களத்தி னின்றும்
ஆடுறு செயலின் வந்த
கிளைஞரோ டணைந்தார் தம்மில்
ஓடினு ருள்ளா ருய்ந்தா
ரொழிந்தவ ரொழிந்தே மாண்டார்
நீடிய வாளுந் தாமு
நின்றவர் தாமே நின்றார். (பெரிய புராணம்)

இயற்பகையார் இவ்வாறு போர் செய்ய அவரை எதிர்த்த சுற்றத்தாருள் பயந்து ஓடினவர்களையொழிய மற்ற யாவரும் மடிந்தனர். நாயனுர் வாளுங் கையுமாக நின்றூர்.

(விருத்தம்)

திருவுடை மனைவி யாரைக்
　　கொடுத்திடச் செறுத்து முன்பு
வருபெருஞ் சுற்ற மெல்லாம்
　　வாளினுற் றுணித்து மாட்டி
அருமறை முனியை நோக்கி
　　யடிகணீ ரஞ்சா வண்ணம்
பொருவருங் கான நீங்க
　　விடுவனென் றுடனே போந்தார்.
(பெரிய புராணம்)

பிறகு நாயனுர் சிவனடியாரை நோக்கி, "இனித் தேவரீர் பயப்பட வேண்டாம். இந்தக் காட்டைக் கடத்திவிடுவேன்" என்று சொல்லி அவருடன் புறப் பட்டார்.

(விருத்தம்)

இருவரா லறிய வொண்ணு
　　வொருவர்பின் செல்லு மேழை
பொருதிறல் வீரர் பின்பு
　　போகமுன் போகும் போதில்
அருமறை முனிவன் சாய்க்கா
　　டதன்மருங் கணைய மேவித்
திருமலி தோளி னுனை
　　மீளெனச் செப்பி னுனே. (பெரிய புராணம்)

அடியாராக வந்த சிவபெருமான் இயற்பகையாரும் அவர் மனைவியும் பின்னே வர முன்னே போகும்போது சாய்க்காடென்னும் ஸ்தலத்தை அணுகினர். அப்போது அவர் நாயனரை நோக்கி, "இனி நீ உனது ஊருக்கு மீண்டு செல்" என்று கூறினர்.

(விருத்தம்)

தவமுனி தன்னை மீளச் சொன்னபின் றலையா லார
அவன்மலர்ப் பதங்கள் சூடி யஞ்சலி கூப்பி நின்று
புவனமுன் றுய்ய வந்த பூசுரன் றன்னை யேத்தி
இவனருள் பெறப்பெற் றேனென் றியற்பகையாருமீண்
டார். (பெரிய.)

இயற்பகையார் சிவனடியாரை வணங்கித் தம் ஊருக்கு வரலாயினர்.

(விருத்தம்)

செய்வதற் கரிய செய்கை
செய்தநற் றொண்டர் போக
மைதிகழ் கண்ட னெண்டோண்
மறையவன் மகிழ்ந்து நோக்கிப்
பொய்தரு முள்ள மில்லான்
பார்க்கிலன் போனு னென்று
மெய்தரு சிந்தை யாரை
மீளவு மழைக்க லுற்றுன். (பெரிய புராணம்)

இயற்பகையார் போனவுடன் சிவபெருமான் அவரைப் பார்த்து, "இவன் சற்றேனும் திரும்பிப் பாராமல் தன் மனைவியை அறவே மறந்துவிட்டுச் செல்

கின்ருன்" என்று வியந்து மீளவும் அவரை அழைக் கலாஞர்.

(விருத்தம்)

இயற்பகை முனிவா வோல மீண்டுநீ வருவா யோலம்
அயர்ப்பிலா தானே யோல மன்பனே யோல மோலம்
செயற்கருஞ் செய்கை செய்த தீரனே யோல மென்ருன்
மயக்கரு மறையோ விட்டு மாலயன் றேட நின்ருன்.

(பெரிய புராணம்)

## 19

[ராகம்: பரசு - தாளம்: ஆதி]

### பல்லவி

வாவா வெனவழைத்தார் - தொண்டர்தமை
வாவா வென வழைத்தார் (வாவா)

### அநுபல்லவி

நாவால் மறையோதியும்
மேவவொண் ணுதஜயன் (வாவா)

### சரணங்கள்

1. பொய்யினை யொழிந்தேயென்றும்
புனிதனுய் நமக் கன்பு
செய்யும் தொண்டர்கள்பணி
செய்தவ னேஎன்முன். (வாவா)

2. மாதவன் மண்ணினும்
மலரவன் விண்ணினும்
பாத சிரந்தேடிக் காணுத
பரமஞர் விரைந்தோடி (வாவா)

(விருத்தம்)

அழைத்தபே ரோசை கேளா வடியனேன் வந்தேன் வந்தேன்
பிழைத்தவ ருளரே லின்னும் பெருவலித் தடக்கை வாளில்
இழைத்தவ ராகின் ருரென் றியற்பகை யார்வந் தெய்தக்
குழைப்பொலி காதி னனு மறைந்தனன் கோலங் கொள்வான்.

(பெரிய.)

சிவனடியார் தம்மை அழைப்பதைக் கேட்டு, "இதோ வந்துவிட்டேன்; ஓடிப்போனவர்களில் எவரேனும் மீண்டு வந்து தடுக்கின்ருரோ? அப்படியானல் அவரை இப்பொழுதே கொல்கின்றேன்" என்று சொல்லிப் போய்ப் பார்த்தார். பார்த்தபோது சிவபெருமான் மறைந்தார்.

## 20

(விருத்தம்)

அந்தண ருளம கிழ்ந்தே யரனடி யாரை நோக்கி
வந்தது போது மிந்த வனிதையோ டேகு வம்யாம்
சிந்தையில் மகிழ்ந்து வீடு செல்லுமென் றனுப்பிக் காட்டில்
விந்தையா யவரைக் கூவி விமலனர் மறைந்திட் டாரே.

(கோபாலகிருஷ்ண பாரதியார்)

சென்றவர் முனியைக் காணர்
 சேயிழை தன்னைக் கண்டார்
பொன்றிகழ் குன்று வெள்ளிப்
 பொருப்பின்மேற் பொலிந்த தென்னத்
தன்றுணை யுடனே வானிற்
 றலைவனை விடைமேற் கண்டார்
நின்றிலர் தொழுது வீழ்ந்தார்
 நிலத்தினின் றெழுந்தார் நேர்ந்தார்.

(பெரிய.)

இயற்பகையார் சிவனடியாரைக் காணமல் தம் மனைவியை மாத்திரம் கண்டார். உடனே சிவபிரான் வானத்

தில் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காட்சி கொடுக்கவே தரிசித்துத் துதிக்கத் தொடங்கினார்.

(விருத்தம்)

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன.

விண்ணிடை நின்ற வெள்ளை விடையவ ரடியார் தம்மை
எண்ணிய் வுலகு தன்னி லிப்படி நம்பா லன்பு
பண்ணிய பரிவு கண்டு மகிழ்ந்தனம் பழுதி லாதாய்
நண்ணிய மனைவி யோடு நம்முடன் போது கென்று.

திருவளர் சிறப்பின் மிக்க திருத்தொண்டர் தமக்குந் தோற்றம்
மருவிய தெய்வக் கற்பின் மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய வருளி னீடும் பேறளித் திமையோ ரேத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும் பொற்பொது வதனுட் புக்கார்.

(பெரிய புராணம்.)

துதிசெய்து நின்ற இயற்பகையாரை நோக்கிச் சிவபெருமான், "நீ நம்பால் பூண்ட பக்திப் பெருக்கைக் கண்டு மகிழ்ந்தோம். நீயும் உன் மனைவியும் நம்முடனே வருக" என்று சொல்லிச் சிற்சபையிற் புகுந்தருளினார்.

(விருத்தம்)

வானவர் பூவின் மாரி பொழியமா மறைக ளார்ப்ப
ஞானமா முனிவர் போற்ற நலமிகு சிவலோ கத்தில்
ஊனமி றொண்டர் கும்பிட் டுடனுறை பெருமை பெற்றார்
ஏனைய சுற்றத் தாரும் வானிடை யின்பம் பெற்றார்.

(பெரிய புராணம்.)

சிவபெருமான் திருவருளால் இயற்பகையாரும் அவர் மனைவியாரும் சிவலோக பதவியைப் பெற்றார்கள். அவர்களுடைய சுற்றத்தாரும் சுவர்க்க இன்பத்தை அடைந்தார்கள்.

ஒரு பிரதியில் அதிகமாக இரண்டு கீர்த்தனங்கள் காணப்பட்டன; அவை வருமாறு:

## 1

இயற்பகைச் செட்டியார் மாமியார் தன் பெண்ணை நோக்கி ஸ்வாமியின் வைபவத்தைச் சொல்லுகிறாள்.

[ராகம்: நாதநாமக்கிரியை. தாளம்: சாபு]

### பல்லவி

ஏதடி பெண்ணே - இவனிடத்தில்
காதலோ கண்ணே (ஏதடி)

### அநுபல்லவி

மேதினி புகழ்மலை நாதன் குமரியாகி
விளங்கு மணியே யெங்கும்
துலங்குந் தனியேயிது (ஏதடி)

### சரணங்கள்

1. மெய்யழ கோனை மழுவணியும்
கையழ கோனை மணம்செய்ய
வீற்றிருக்கிறாய் கட்டிக்

காத்திருக்கிறாய் ஒத்துப்
பார்த்திருக்கிறாய் இவன்
கோத்திரங் குலமில்லை (ஏதடி)

2. கரியுரித் தாண்டி - கந்தர்ப்பனைக்
கருகவைத் தாண்டி - கையிலொரு
காசு பணமுமில்லை
பூசச்சந் தனமில்லை
ஆசை பொருவரில்லை
வீசி நடக்கமாட்டான் (ஏதடி)

3. ஒருகா லூனம் - தலையில்
ஒன்றுந் தெரியா மானம் - அரையிற் கட்டி
உடுக்கத் துணியுமில்லை
படுக்கப் பாயுமில்லை
உடுக்கை யடித்துவயிறு
வளர்க்கிறான் பாரடி (ஏதடி)

4. ஒற்றைக் காளைமாட்டாண்டி
குடும்பத்தைத் தாளமாட்டாண்டி
எப்போதுமே காட்டிற்குடியிருப்பு
வீட்டுக் கவலையில்லை (ஏதடி)

5. பிள்ளைப் பழிசுமந் தாண்டி - நல்லவன்போல்
வழிதிறந் தாண்டி - அவனிடத்தில்
பாயும் புலியிருக்கு
தோயும் கறையிருக்கு
தேயும் பிறையிருக்கு
தாயும் தந்தையுமில்லை (ஏதடி)

6. அன்னமே மாயம் - பாலகிருஷ்ணன்
சொன்னது பாயம் - கேட்டபேர்க்கு
முத்தி தருவேனென்றும்
சித்தி தருவேனென்றும்
வெற்றி தருவேனென்றும்
நத்திப் பேசுவதெல்லாம் (ஏதடி)

7. விளையாட்டுப் பேச்சு - நாடெங்கும்
நிலைநாட்டிப் போச்சு - அவனிருக்கும்
ஊரு மம்பலம் அவன்
பேரு மம்பலம் அவன்
சீரு மம்பலம் மெத்தச்
செல்வமம் பலமாச்சு (ஏதடி)

## 2

இயற்பகை நாயனர் ஸ்வாமியைப் பார்த்துச் சொல்லுகிறர்.

[ராகம்: கௌளீபந்து. தாளம்: சாபு]

### பல்லவி

பிச்சைக்கார வேஷம் காட்டுறீர் - நீர்
புரட்ட னென்பதை நிலை நாட்டுறீர்
(பிச்சைக்)

### அநுபல்லவி

இச்சையானமட்டு மளிக்கும் படிக்குத்தனம்
இருக்குது எனக்கு மனமொன் றிருக்குது
(பிச்சைக்)

### சரணங்கள்

1. வெள்ளி மலையிற் குடி இருக்கிறீர் - தங்க
வில்லைக் கைத் தலத்தினிற் பிடிக்கிறீர்
துள்ளுங் காளைக்குவிலை மதிக்கவேண் டாமிந்தத்
தொல்லுல கமும்விலை இல்லை யுள்ளபடிக்குப்
(பிச்சைக்)

2. மலைமகள் அருமைப்பெண் ணல்லவோ - முத்து
மாணிக்கங் களையெண்ணிச் சொல்லவோ
பலநிதிக் குடையவன் பாதகா ணிக்கைவைத்துப்
பார்த்திருக் கிறான்கட்டிக்
காத்திருக்கிறான்போம் போம் (பிச்சைக்)

3. பாலகிருஷ் ணன்தேடி வருகிறான் - பொங்கும்
பாற்கட லுங்கொண்டு தருகிறான்
காலிற் சிலம்பிருக்கக் கனக சபையிருக்கக்
கதித்தமார் பினில்வச்ரப்
பதக்கமொன் றிருக்கையில் (பிச்சைக்)

முற்றும்

# ஐயரவர்கள் குறிப்பு

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய திருநீலகண்ட நாயனார் சரித்திரக் கீர்த்தனைகளையும் இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனைகளையும் வெளியிட வேண்டுமென்று 'கலைமகள்' அதிபர் ஸ்ரீமான் ரா. நாராயணசாமி ஐயரவர்களும் சென்னை ஸங்கீத வித்வத்ஸபையினரும் என்னைத் தூண்டினார்கள். ஸ்ரீமான் ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் எப்படியாவது இவை அச்சில் வெளிவர வேண்டுமென்று பல முறை வற்புறுத்தினார்கள். இந்த இரண்டு சரித்திரக் கீர்த்தனைகளிற் கிடைத்தவற்றையும் வேறு சில கீர்த்தனைகளையும் தம்முடைய பெரிய தகப்பனார் நல்லமாங்குடி கணேசையர் ஒரு குறிப்புப் புஸ்தகத்தில் எழுதி வைத்திருப்பதாகத் தெரிவித்து அப்புஸ்தகத்திலுள்ள பாட்டுக்களைப் பிரதி செய்துகொள்ளும்படி அனுப்பி உதவியவர் இப்போது பங்களூர் நகரத்தின்கண் கவிபுரத்தில் இருக்கும் ஸ்ரீமான் B. மீனாட்சி சுந்தரையராவர். என் வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்னை ஸங்கீத வித்வத்ஸபையார் இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனங்களிற் சிலவற்றைத் திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள் குமாரராகிய ஸ்ரீமான் தி. ப, கல்யாணராம சாஸ்திரியாரிடமிருந்து வருவித்துக் கொடுத்தனர். இவ்வெல்லோரிடத்தும் நான் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

மகாமகோபாத்தியாய டாக்டர்

# உ. வே. சாமிநாதையரவர்கள்

எழுதிய சரித்திரங்கள்

1. **ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்—**
சென்ற நூற்றாண்டில் சிறந்த கவிஞராக விளங்கிய திருவாவடுதுறை ஆதீனத்து மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாறு மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. இதன்கண் மிக அருமையான நிகழ்ச்சிகளும், இலக்கிய வளர்ச்சியின் சரிதமும் காணப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் பாகம் | ரூ. | 2 | 0 | 0 |
| இரண்டாம் பாகம் | ரூ. | 2 | 0 | 0 |

2. **கனம் கிருஷ்ணையர்—**
அவர் சரித்திரமும் இயற்றிய கீர்த்தனங்கள் அறுபதும் இதில் சேர்க்கப்பெற்றுள்ளன.
விலை அணா 8

3. **கோபாலகிருஷ்ண பாரதியார்—**
ஐயரவர்கள் நந்தன் சரித்திரக் கீர்த்தனத்தின் ஆசிரியராகிய கோபாலகிருஷ்ண பாரதியாரிடம் சில காலம் சங்கீதப் பயிற்சி செய்து வந்தார்கள். பாரதியாரைப்பற்றி இதுவரையில் வெளிவராத பல அரிய செய்திகள் இதில் உள்ளன.
விலை அணா 8

4. **மகாவைத்தியநாதையர்—**
சிறந்த சங்கீத வித்துவானாக விளங்கிப் புகழ்பெற்ற மகாவைத்தியநாதையருடைய சரித்திரம். (அச்சில்)

மானேஜர் - கலைமகள் - மயிலாப்பூர்